கன்னித்தமிழ்

278

ஆசிரியர்: மறைமலையடிமை





மலர் 1
இதழ் 2

1—10—1955

மாத வெளியீடு

விலை
4
அணா

கும்பகோணத்தில்

தங்குவதற்கு வசதியுள்ள
முதன்மையான விடுதி

ஜானகிராம் பில்டிங்ஸ்

ரயில்வே ஸ்டேஷனுக்கு சமீபமாக உள்ள
ஒரே லாட்ஜிங் ஹவுஸ்.

நவீன சுகாதார வசதிகள் உள்ள,
காற்றோட்டமான புதிய அறைகள் மேற்
கொண்டும் கட்டியிருக்கிறோம்.

முன்னதாக அறிவித்தால் ரூம்கள்
ரிசர்வ் செய்யப்படும். கார்கள், வான்
கள் வந்து தங்க தனி இடம் உள்ளது.

உங்கள் நல்வரவை விரும்புகிறோம்.

இந்த இதழில்....

கன்னித்தமிழ்—கி. வா. ஜகன்னாதன்

தியாகம் தேவை—டாக்டர் மு. வரதராசனார்

மின்னல்—"தமிழழகன்"

அனுமன் ஆற்றல்—தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான் M. A.,

இராமாயணமும், சிலப்பதிகாரமும்—இஸ்மத் பாட்சா

கோலோடு நின்றான்—கி. ஆ. பெ. விசுவநாதம்

அக்காவும் தங்கையும்—வ. பாலசுப்பிரமணியன்

வாழ்த்து—"நடாதூரன்"

அவர் அறிஞரா?—சோ. வேலாயுதம்

குறள் சொல்லும் கதை—மங்கலம் மனோகரன்

இசை இன்பம்—"அழகனார்"

போற்றுவாய் போற்றுவாயே!—"ஆரம்"

வாழ்க!

"கன்னித்தமிழ்" இரண்டாவது இதழ் உங்களை தேடி வந்துள்ளது.

இச்சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்கி கட்டுரைகளை வழங்கிய அறிஞர்களுக்கும், தாமாகவே முன்வந்து கதை, கட்டுரை, கவிதைகளை அனுப்பிய எழுத்தாளர்களுக்கும் எங்கள் மகிழ்ச்சியை தெரிவித்துக்கொள்கிறோம்.

அடுத்த இதழ் 1—11—55 தீபஒளி மலராக விளங்கும், இன்னும் அதிக பக்கங்களுடன், சிறப்பாக வெளிவரும்.

இல. திருவாசகன்,
செயலாளர்,
கன்னித் தமிழ்ச் சங்கம்,
களஞ்சேரி, (தஞ்சை.)

வாழ்க!

கன்னகரம் தஞ்சைக் களஞ்சேரி தன்னிலே
அன்னை மொழியாம் அருந்தமிழில்—மின்னொளியே
அன்பர்கள் நல்லுரைத் திண்மையால் தொடங்குமிக்
கன்னித் தமிழிதழ் வாழ்க! "தென்னவன்"

அட்டைப் படக் கவிதை

கன்னித் தமிழ்ச் செல்வி

"தமிழ்நெஞ்சன்"

"கன்னித் தமிழ்"மலர் மீதினிலே—எங்கள்
கன்னித் தமிழ்ச்செல்வி வீற்றிருந்தாள்
கண்ணுக் கழகான காட்சியடா—அதைக்
கண்டு சுவைத்து மகிழ்ந்திருந்தேன்.

"இயலிசை நாடகம்" என்பவைகள்—அந்த
இன்மலர் மேவும் இதழ்த் தொகுப்பாம்
வயங்கும் இலைகள் இலக்கியமோ—டரும்
வண்டமிழின் நல்லிலக்கணமாம்.

காலிற் "சிலம்பி"னைப் பூண்டிருந்தாள்—இரு
கைகளிலும் "வளை" தொட்டிருந்தாள்
நூலிற் குறுகிய நுண்ணிடையில்—அவள்
நன்"மணி மேகலை" சேர்த்திருந்தாள்.

காதிலே "குண்டலம்" மின்னலிட—இரு
கண்ணிலே அன்பொளி வீசிநிற்க
நாதம் எழுப்பி மகிழ்ந்திருந்தாள்—அந்த
நல்லதோர் காட்சியைக் கண்டேனடா!

"சிந்தா மணி"முடி வைத்திருந்தாள்.—அவள்
செவ்விதழில் சுவை சேர்ந்திருந்தாள்
விந்தை விந்தையடா வந்துநீகாண்—அவள்
வீற்றிருக்கும் இன்பக் காட்சியினை.

The Tanjore Art Exhibition

1955

PALACE BUILDINGS. TANJORE.

We the president and Members of the Tanjore Art Exhibition Committee thank you for your valuable Exhibits and making the Exhibition a success.

(SD.) C. A RAMAKRISHNAN
PRESIDENT.

To

MESSRS KANNI TAMIL SANGAM,
KALANCHERI.

கன்னித் தமிழ்

K.V. JAGANNATHAN
ஆசிரியர்: கலைமகள்

மனிதராகப் பிறந்தவர் யாவரும் பேசுகின்றனர். அதாவது நம்முடைய உள்ளக் கருத்தை வேறு ஒருவருக்கு வாயினால் ஒலிக்கும் ஒலிக்கூட்டத்துக்கு மொழியென்று பெயர். எல்லா மனிதர்களும் வாயினால் ஒலி செய்கின்றனர். ஆனால் சிலர் வாயிலிருந்து வரும் ஒலி மொழி ஆவதில்லை. எல்லோருடைய வாயிலிருந்தும் வரும் ஒலி எப்போதும் மொழி ஆவதில்லை.

நாம் வாயை அசைத்து நாக்கைப் புரட்டிப் பேசுகிறோம். அதைப் பார்த்து ஊமையும் தன் நாக்கைப்புரட்டி முழங்குகிறான். ஆனால் பாவம்! அவன் செய்யும் ஒலி மொழி ஆகாது. அப்படியே சின்னஞ் சிறு குழந்தை இனிய மழலை பேசுகிறது. அன்பினால் அதைக்குழலினும் யாழினும் இனிதென்று கொள்கின்றோமே ஒழிய அகராதியைக் கொண்டு அந்த ஒலிக்குப் பொருள் தேட முடியாது.

இந்த இரண்டு வகையான ஒலியும் மொழி ஆகாததற்குக் காரணம் என்ன? மக்கள் வாயொலி மூலமாகத் தங்கள் கருத்தைப் புலப்படுத்தும்போது ஒருவரையறையோடு அதைச்செய்கிறார்கள். அந்த வரையறை இப்படித்தான் பேச வேண்டும் என்று ஒருவர் கட்டுப்படுத்தாமல் உணவு உண்ணவும் ஆடை உடுத்தவும் எப்படிப் பழக்கம் ஏற்படுகிறதோ அப்படித் தானே ஏற்படுகிறது. பழக்கத்தினால் வருவதுதான் என்றாலும் அந்தப் பழக்கத்தில் உள்ள ஒருவகைக் கட்டுப்பாட்டைக் கட்டுப்பாடாகவே நாம் நினைப்பதில்லை.

இடுப்பில் நம்முடைய நாட்டுக்குத் தக்கபடி ஆடை உடுத்துக்கொள்கிறோம். இந்த நாட்டுக்கு ஏற்றபடி குழம்பைச் சோற்றில் ஊற்றிப் பிசைந்து சாப்பிடுகிறோம். இத்தகைய பழக்கங்கள் பிறவியோடு வரவில்லை. தாயோ தந்தையோ பிறரோ செய்வதைக் கண்டு தெரிந்து கொள்

கிறோம். மொழியும் அப்படித்தான். ஊர் முழுவதும் பேசும் பேச்சுக்கிடையே வாழ்வதனால் நம்மை அறியாமல் அது நமக்குப் பழக்கமாகிறது. குழந்தைப் பிராயத்திலே இயற்கையாக வரும் ஒலி மாறி அதற்கு ஒரு வரையறை ஏற்பட்டு நாமும் தமிழில் பேசுகிறோம்.

எந்த நாட்டுக் குழந்தையானாலும் அவை இயற்கையாகப் பேசும் மொழி ஒன்றுதான். அதற்கு அகராதி இல்லை. ஆனாலும் எல்லாக்குழந்தைகளும் ஒரே மாதிரி மழலை பேசுவதில்லை. ஆகையால் அவை ஒலிக்கும் ஒலியிடையே ஒரு பொதுமையைக் கண்டு பிடித்து அதைக் குழந்தை மொழியாக வைத்துக் கொள்ள முடியாது. ஒவ்வொரு குழந்தையும் தனக்கென்று உடம்பும் உயிரும் அமைந்தது போலத் தனக்கென்று ஒரு குழலாகிய மொழியையும் பெற்றுத்தான் பிறக்கிறது. அந்த மொழியைக் கடவுள் ஒருவரே புரிந்து கொள்ள முடியும்.

மாதக் கணக்கில் வளர்ந்த குழந்தை அழுகையொலியும், 'ங்கு' சப்தமும் மாறி வளர்ந்து மழலை பிதற்றத் தொடங்கும்போது அதன் தாய் தந்தையர் பழக்கத்தால் அந்தக்குழந்தையின் பெற்றோருக்குத்தான் அர்த்தமாகும். சேக்கிழார் என்ற புலவர் இதை ஓரிடத்திற் சொல்லுகிறார். பெரிய புராணத்தில் அவையடக்கத்தில் இந்தக் கருத்தைத் தெரிவிக்கிறார்.

"என் மனசுக்குள் சிவபக்தர்களுடைய பெருமையைச் சொல்ல வேண்டும் என்ற ஆசை எழுந்தது. அதனால் இந்த நூலைப் பாடினேன். என் கருத்து முழுவதையும் இந்த நூல் வெளியிடாமல் இருக்கலாம். ஆனாலும் என் கருத்து இன்னதென்று உணர்ந்த பெரியவர்கள் அந்தக் கருத்துக்கு ஏற்ற சொற்களும் அமைப்பும் இதில் இல்லாவிட்டாலும் அவை இருப்பதாகவே பாவிக்க வேண்டும்; தாமே அவற்றை நிரப்பிக் கொள்ளவேண்டும்" என்று அவை யடக்கம் சொல்லவந்தவர் அதற்கு உபமானம் ஒன்று காட்டுகிறார்.

"குழந்தை பேசும்போது அது ஏதோ ஒன்றைக் கருதித்தான் பேசுகிறது. அந்தக் கருத்தை தன் மழலைச் சொல்லால் தெரிவித்து விடலாம் என்ற ஆசையோடு பேசுகிறது. ஆனால் யாவருக்கும் அது விளங்குகிறதா? இல்லை. அந்தக் குழந்தையின் கருத்தை யாருமே உணர்வதில்லையா? சிலர் உணர்ந்து கொள்கிறார்கள். அந்தக் குழந்தையினிடம் அன்பு வைத்துப் பழகுபவர்கள் அது இன்னது வேண்டுமென்று கேட்கிறது என்ற கருத்தைத் தெரிந்து கொண்டு, அந்தக் கருத்தை வெளிப்படையாகச் சொன்னதாகவே கொள்கிறார்கள். 'போக்கிரி, பால் வேண்டுமென்று கேட்கிறான்!' என்று அயல் வீட்டுக்காரருக்கும் அந்த மொழியின் பொருளை விளக்குகிறார்கள். அவர்கள் எப்படித் தம் குழந்தையின் கருத்தை உணர்ந்து கொண்டு அதற்கு ஏற்ற வாக்கியங்களைத் தாங்களே செய்து கொள்ளுகிறார்களோ, அப்படி என் திறத்தில் பெரியவர்கள் செய்ய வேண்டும்" என்று பொருள் விரியும்படியாகச் சேக்கிழார் பாடியிருக்கிறார்.

செப்பல் உற்ற பொருளின் கருத்தினுல்
அப்பொ ருட்குரை யாவரும் கொள்வரால்.

[பொருள் — குழந்தை. அப் பொருட்கு உரை — அந்த அர்த்தத்துக்கு ஏற்ற மொழியை.]

குழந்தை பிறகு மொழியைத் தெரிந்து கொள்கிறது. ஆனால் ஊமை எப்போதும் தெரிந்து கொள்வதில்லை. காரணம் பிறர் பேசும் ஒலியைக் கேட்டு அந்த மாதிரிப் பேச அவனுக்குச் செவி இல்லை. உதட்டையும் நாக்கையும் பார்த்து ஏதோ சிரமப்பட்டு உளறுகிறான். மொழி அந்த முயற்சிக்குள்ளே அடங்கினது அல்லவே!

தமிழ் நாட்டில் தமிழை ஒவ்வொரு வீட்டிலும் பேசுகிறார்கள். அந்த வீட்டுப் பேச்சிலே கூட ஒரு தனிமை உண்டு. அதை முதலில் குழந்தை தெரிந்து கொள்கிறது. பிறகு ஊரோடு பழகி அது தன் பேச்சை விருத்தி செய்து கொள்கிறது. இந்தப் பழக்கம் நடை கற்பதுபோல இயற்

கையாகவே வருகிறது. அயல் வீட்டில் வாழ்பவர்கள் நெருங்கிப் பழகுபவர்களாக இருந்து, அவர்கள் வேறு மொழி பேசினால், அதையும் குழந்தை எளிதில் பழகிக் கொள்கிறது. வீட்டில் ஒரு மொழியும் வெளியில் வேறு மொழியும் வழங்கும் இடங்களில் வளரும் குழந்தைகளுக்கு அந்த இரண்டும் மிக எளிதில் வந்து விடுகின்றன.

இதனால் அந்த இரண்டு மொழிகளும் மிகவும் சுலபமாக எல்லோருக்கும் வந்துவிடும் என்று சொல்லலாமா? மொழிக்குச் சில வரையறைகள் இருக்கின்றன. மொழி வழங்கும் சமுதாயத்துக்கு புறம்பே இருந்து அந்த மொழியைக் கற்றுக் கொள்கிறவர்களுக்கு அதன் வரையறைகள் தனியே தோற்றும்; கடினமாகவும் இருக்கும். அந்த சமுதாயத்திலே பிறந்து வளரும் மக்களுக்கோ அநேகமாக அந்த வரையறையைத் தனியே கவனிக்கும் சந்தர்ப்பம் இருப்பதில்லை. அவர்கள் கவனிக்காவிட்டாலும், வரையறையான அமைப்பை உடைமையினால் தான் ஒரு மொழி, மொழி நிலையை அடைகிறது என்ற உண்மை எப்போதும் உண்மையாகவே நிற்கும்.

தமிழ் மொழி தமிழுலகம் என்னும் இடத்தில் வழங்குவது. அதற்கு இட வரம்பு உண்டு. இன்ன கருத்தை இப்படிச் சொல்ல வேண்டும் என்ற முறை உண்டு. அந்த முறையைத் தனியே புலவர்கள் கவனித்தார்கள். கவனித்து ஆராய்ந்ததைத் தனியே எழுதினார்கள். அது தான் இலக்கணம். ஒரு பொருள் இருந்தால் அதற்கு குணம் உண்டு. அந்தக் குணத்தை அதிலிருந்து வேறு பிரிக்க முடியாது. ஆனாலும் அதைப் பற்றிப் பேசும் போதும் ஆராய்ச்சி பண்ணும் போதும் குணத்தைத் தனியே எடுத்துச் சொல்லி விவரிக்கிறோம். தாமரைப்பூவிலே செம்மை இருக்கிறது. செம்மையை தாமரைப் பூவிலிருந்து பிரிக்க முடியாது. ஆனாலும் தாமரைப் பூவில் செம்மை நிறம் இருக்கிறது என்று பேச்சில் வழங்குகிறோம். அதுபோலவே மொழியில் ஒரு வரம்பு இருக்கிறது என்று சொல்கிறோம். இந்த வரம்புக்கு இலக்கணம் என்ற பெயரைப் பெரியோர்கள் கொடுத்

திருக்கிறார்கள். தமிழாகிய தாமரைப் பூவின் குணம் இலக்கணம். அந்த இலக்கணத்தைத் தனியே பிரிக்க முடியாது; ஆனால் தனியே பார்க்கலாம்; தனியே விவகரிக்கலாம்.

தாமரைப் பூவுக்குச் செம்மை இயற்கையாகவே அமைந்ததுபோல மொழிக்கும் வரையறை அது பிறந்தபோதே அமைந்து விட்டது. ஆனாலும் வெட்பதட்ப நிலையினாலும் தாவர நூலாருடைய முயற்சியாலும் தாமரைப் பூவின் நிறத்தில் வேறுபாடுகள் அமைவது போலத் தமிழின் வரையறைகள் மாறலாம். அந்த மாற்றம் நினைத்த பொழுது நினைத்தவர்கள் நினைத்தபடி அமைவது அல்ல. அது மாற்றப்படுவது அன்று; தானே மாறுவது. அந்த மாற்றத்தை உணர்ந்து இன்னபடி மாறியிருக்கிறதென்று ஒரு புலவன் சொன்னால் அது புதிய இலக்கணம் ஆகும். அந்தப் புதிய இலக்கணத்துக்காக மொழி மாறுவதில்லை. மொழியின் அமைப்பு மாறி வருவதனால் இலக்கணமும் மாறுகிறது.

தமிழ்மொழி பல காலமாகத் தமிழருடைய கருத்தைப் புலப்படுத்தும் கருவியாக இருந்தது. பிறகு கலைத் திறமை பெற்றுப் பல பல நூல்களாகவும் உருப்பெற்றது. மனிதர்கள் பேசும் மொழி தினந்தோறும் உண்ணும் உணவைப் போன்றது. அவற்றுளே புலவர் இயற்றிய நூல்கள் வசதியுள்ளவர்கள் அமைத்த விருந்தைப் போன்றவை. தமிழில் இந்த இரண்டுக்கும் பஞ்சமே இல்லை.

பேச்சுவழக்கு மாயாமல் நூல் படைப்பும் மங்காமல் மேலும் மேலும் வளர்ந்துவரும் ஒரு மொழியில் அவ்வப்போது புதிய புதிய துறைகள் அமைவது இயற்கை. புதிய புதிய அழகு பொலிவதும் இயல்பே. தமிழில் இப்படி உண்டான மாற்றத்தைப் பார்த்தால் மிக அதிகமென்று சொல்லமுடியாது. புதிதாக உண்டான மொழியில் தான் புதிது புதிதாக வளர்ச்சி உண்டாகும். ஒரு மரம் செடியாக இருக்கும்போது மாதத்துக்கு மாதம் அதன் வளர்ச்சி நன்றாகத் தென்படும். ஆனால் அது மரமாக வளர்ந்து சேகேறி வானளாவிப் படர்ந்து நிற்கும் போது அதில் உண்டாகும்

வளர்ச்சி அவ்வளவாகத் தென்படாது. தன்பால் உண்டான வயிரத்தைப் பாதுகாத்துக் கொண்டு அது நிற்கும். அவசியமான வளர்ச்சி யெல்லாம் அமைந்து விட்டபடியால் புதிய புதிய மலரையும் குழையையும் தோற்றுவிக்கும் அளவோடு அது தன் புதுமையைக் காட்டும்.

தமிழ் இப்படி வளர்ந்து சேகேறிப்போன மொழி. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் உண்டான தொல்காப்பியத்தைக் கொண்டு அக்காலத்தில் வழங்கிய வழக்கைத் தெரிந்து கொள்கிறோம். இன்னும் பெரும்பாலும் அந்த வழக்கை யொட்டியே தமிழ் நிற்கிறதென்று தெரிகிறது. முன்னரே பண்பட்ட மொழியாக இருப்பதால் தமிழ் திடீர் திடீரென்று மாறவில்லை. அன்று தொல்காப்பியர் காட்டிய இலக்கணங்களிற் பெரும் பகுதி இக்காலத்துத் தமிழுக்கும் பொருத்தமாக இருக்கிறது.

இதனால், தமிழ் வளரவில்லை யென்பது கருத்தல்ல. புதிய மலரும் புதிய தளிரும் பொதுளித் தமிழ் புதுமையோடு விளங்குகிறது. அடி மரம் சேகேறி காலத்தால் அலைக்கப்படாமல் நிற்கிறது. அதனால்தான் இதனைக் கன்னித் தமிழ் என்று புலவர்கள் பாராட்டுகிறார்கள். இந்தக் கன்னி மிகப் பழையவள்; ஆனாலும் மிகப் புதியவள். இவளுடைய இலக்கணத்தைச் சொல்லும் தொல்காப்பியம் பழைய நூல்; ஆனால் புதிய காலத்திற்கும் பொருத்தமானது.

இந்தக் கட்டுரை ஷை ஆசிரியர் எழுதியுள்ள ''கன்னித் தமிழ்'' என்னும் நூலிலிருந்து, அனுமதி பெற்று பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அக்காவும் தங்கையும்

வ. பாலசுப்பிரமணியன்

1

நடக்கப்போகும் மற்போரைப் பார்க்க ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு திரண்டிருந்தனர். எங்கும் புகழ்பெற்ற 'மல்லர்' இருவர் சண்டையிடப்போகிருர்கள் என்ருல் கேட்கவேண்டுமா? மிட்டாய்க்கடையில் ஈ மொய்ப்பதுபோல அங்கு ஆண்களும் பெண்களும் மொய்த்திருந்தார்கள்,

மற்போர் நடக்கப்போகும் பீடத்தின் அருகில், முன்வரிசையில் அழகனும், புனிதமும் அமர்ந்திருந்தார்கள். பாடித்திரியும் சோடிக்கிளிகள் போன்றவர்கள் அந்த காதலர்கள்,

அவர்களுக்குப் பக்கத்தில் கணையன் என்ற பெருவீரன் உட்கார்ந்திருந்தான். போர் புரிய காத்து நிற்கும் மல்லர்களில் ஒருவனை ஆரியப் பொருநன், அவனுடைய உற்ற நண்பன், சேர நாட்டின் ஒரு பகுதியான கொண்கான நாட்டை ஆண்டுவந்த நன்னன் என்ற மன்னனின் படைவீரர்களுள் முதன்மை பெற்றவன் கணையன். பிறிதொரு நாளில் நன்னன் தன் தோழர்களான எற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை முதலியோருடன் கூடி சோழன் பெரும்பூட்சென்னியை கழுமலத்தில் எதிர்த்தபோது சென்னியின் படைத்தலைவனை பழையன் இறந்துபட்டான். சினங்கொண்ட சென்னி தன் ஆற்றலையெல்லாம் ஒருங்கு கூட்டி அவர்களை எதிர்த்து வெற்றி கண்டதோடு, இங்கு மற்போர்காண வந்தமர்ந்திருக்கும் கணையனை சிறைகொண்டு சென்ருன்.

போர் ஆரம்பமாகப்போகிறது! மல்லர்களாகிய பாணனும் ஆரியப்பொருநனும் அரங்கத்தில் இறங்கிவிட்டார்கள். பெருமழை பெய்து அடங்கியதுபோல, மக்களின் கைதட்டலும் அடங்கியது, எங்கும் அமைதி! கணையன் எழுந்து நின்றான். கட்டிளங்காளையான அவன் முகத்திலே ஒளி வட்டமிட்டது. தோற்றத்திலே அழகும் வீரியமும் குழைந்திருந்தன. அவன் பேசினான்: "பெருமக்களே! இன்று நடைபெறப்போகும் மற்போரிலே என்னுடைய நண்பன் ஆரியப் பொருநன் போட்டியிடுகிறான். அவன் தோல்வி என்பதையே இதுவரையில் கண்டறியாதவன் என்பதை நீங்களெல்லாம் அறிவீர்கள். இன்றும், இனி என்றும் அவன் வெற்றி பெறுவது திண்ணம். என்பது என் எண்ணம்! அவன் வாழ்க! அவன் திறம் வெல்க" என்றுசொல்லிவிட்டு கணையன் அமர்ந்தான். அவனுடைய ஒரு சார் கொள்கை கூட்டத்திலிருந்த பெரும்பாலோருக்குப் பிடிக்கவில்லை. முகங்களைச் சுளித்துக்கொண்டனர் அவனுடைய இந்தப் பேச்சைக் கேட்டதும்!

போர் தொடங்கிற்று! இரண்டு மலைப் பாம்புகள் பின்னிப் பிணைந்துக் கொண்டு புரளுவதுபோலப் பாணனும், ஆரியப்பொருநனும் புரண்டார்கள். மதங்கொண்ட இரண்டு களிறுகள் மோதிச் சண்டையிடுவது போல இருவரும் மோதிக்கொண்டார்கள், ஆத்திரத்தால் அவர்கள் எழுப்பிய ஒலி, அடவியைக் கலக்கும் அரிமாவின் உறுமலை ஒத்திருந்தது. பார்ப்பவர் அனைவருக்கும் மயிர்க்கூச்செறிந்தது. அவர்கள் பிடிக்கும் பிடியும், அடிக்கும் அடியும், குத்துகின்ற குத்துகளும்... அப்பப்பா! நாமாக இருந்தால் செத்தே போய்விடுவோம் என்று மக்கள் பேசிக்கொள்ளும் அளவுக்கு அவ்வளவு பயங்கரமாக நடந்தது போர்!

பாவம்! கணையனின் சூளுரை பொய்த்துவிட்டது. போரில் பாணன் வெற்றிகொண்டான். ஆரியப்பொருநனின் முழவுபோன்ற தோள்கள் பாணனின் பிடியிலே அகப்பட்டு வலுவிழந்து மண்ணை முத்தமிட்டுக்கிடந்தன. கணையன் தலை குனிந்தான். அவன் முகம் பொலிவிழந்தது.

கண்கள் கலங்கின. அவமானத்தால் அவனுடைய எண்சாண் உடம்பு ஒருசாணாகக் குறுகிற்று. அலைபோல் எழுந்த மக்களின் ஆரவாரம் அவனை நிலைகுலையச் செய்தது. குனிந்த தலை நிமிராது வெளியேறினான். புனிதம் கணவனைக்கண்டு பரிதாபப்பட்டாள்.

2

ஒரு திங்கள் ஓடிச் சென்றது. புனிதம் தன் வீட்டுச் சாளரத்தருகே உட்கார்ந்திருந்தாள். அழகன் வருவான் வருவான் என்று வழிமேல் விழிவைத்து நின்றதெல்லாம் பயனற்றுப் போயிற்று: அழகன் கொஞ்சநாட்களாகவே புனிதத்தைத் தேடி வரவில்லை, பாடித் திரிந்த அந்த சோடிக்கிளிகளில் ஆண்கிளி எங்கோ தெறிகெட்டு திரிந்தது

‘ பகலவன் உதிக்க மறந்தாலும், பௌர்ணமிக் காலத்திலே மதி தன் தண்ணொளியை வீசத் தவறினாலும், அழகன் உன்னைச் சந்திக்கும் கடமையிலிருந்து தவறமாட்டான் புனிதம்!" என்று அவன் எத்தனையோ தடவைகள் சொல்லி இருக்கிறான். அந்த வாக்குறுதிகள், கடமை உணர்ச்சிகள் எல்லாம் எங்கே? காற்றில் பறந்து விட்டனவா? புனிதம் பெருமூச்சு விட்டாள். ஏக்கத்தின் உருவாக வெளிவந்த அந்த மூசசு கூட அனலாகச சுட்டது. இப்படி இன்னும எத்தனை நாட்களோ?

யாரோ நடந்து வரும் ஓசை கேட்கிறது. புனிதம் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அவனுடைய வருகையைப் பார்த்துப் பார்த்துக் கண்கள்தான் பூத்துப் போயிருந்தன என்றாலும், கழுத்துமா சுளுக்கிக்கொண்டு விட்டது? இல்லை! வேண்டுமென்றுதான் அப்படி இருந்தாள் புனிதம். நடந்து வருகிறவர் அச்சப்பட்டு வருவதாகத் தெரிகிறது. ஒருவேளை ...அவர்தான் வருகிறாரோ? . வரட்டும்! நாம் திரும்பிப் பார்க்கக் கூடாது. திரும்பிப் பார்த்தால், இத்தனை நாட்களாக உள்ளத்திலே பொங்கி நிறைந்திருக்கும்

சினமும், குமுறலும் ஒரு நொடியில் கொஞ்சலாக மாறி விடும். அதற்கு நாம் இடங்கொடுக்கக்கூடாது.

"அக்கா!"

பெண் குரலாகவன்றோ கேட்கிறது!...புனிதத்தின் முகம் சுருங்கிற்று! மறுபடியும் ஏமாற்றம் திரும்பிப்பார்த்தாள். ஒரு பெண் நின்றுகொண்டிருந்தாள்.

"யார் நீ?" என்று கோபமாகக் கேட்டாள் புனிதம்

"என்னை உங்களுக்குத் தெரியவில்லையா அக்கா?"

"தெரியவில்லையே?..."

"இந்தத் தெரு...தான்"

"அப்படியா? உன்னை இதற்கு முன் நான் பார்த்ததில்லையே...! உன் பெயர்?"

"செல்விழி"

"இங்கு எதற்கு வந்தாய்?"

"தங்களைப் பார்த்துப் போகத்தான்...! அடடா! நீங்கள்தான் எவ்வளவு அழகாக இருக்கிறீர்கள். உங்கள் கரிய கூந்தலின் பளபளப்பு என் கண்களைப் பறிக்கிறது. உங்கள் தாமரை முகத்தைப் பார்த்துதான்...அதோ! அந்தக் குளத்திலுள்ள தாமரை மலர் கூடத் தலை சாய்ந்து கிடக்கிறது. உங்கள் குணம் மல்லிகையின் மணம் போலத் தண்ணென்றிருக்கிறது."

புனிதத்துக்கு எரிச்சலாக வந்தது. இவளை இதெல்லாம் யார் கேட்டது? என் அழகையும், குணத்தையும் புகழ்ந்து இவளுக்கு ஏதாவது ஆக வேண்டி இருக்கிறதா?" என்று எண்ணமிடலானாள்.

என் இப்படி முகமன் கூறுகிறாய்?...இப்படி இச்சகம் பேசுகிறவர்களையெல்லாம் நம்பித்தானே...நான் வெம்பிக் கிடக்கிறேன்..."

"அடடா! நான் கேள்விப்பட்டது...மேலும் உறுதியாயிற்று; 'தற்புகழ்ச்சி' தங்கட்குப் பிடிக்கவே பிடிக்காதாம்"

"இவள் கேள்விப்படாது இந்த ஊரிலேயே ஒன்று மிருக்காது போலிருக்கிறது சரியான அக்கப்போர் பேர் வழிதான்!" என்று தீர்மானம் செய்து கொண்டாள் புனிதம்.

"ஊம்...அப்படியென்று உனக்கு யார் சொன்னது...?" என்று கேட்டாள் புனிதம்.

"யார் சொன்னால் என்ன அக்கா...! உங்களுக்குத் தற்புகழ்ச்சி பிடிக்காது... இல்லையா...?"

"இதோபார்! செல்விழி...! அருள்கூர்ந்து அடிக்கொருதரம் 'அக்கா' என்று என்னைக் கூப்பிட்டுக் கொண்டிருக்காதே...என் பெயர் புனிதம் அழகாகப் பெயரைச் சொல்லிக் கூப்பிடேன்."

"நான் அப்படிக் கூப்பிடக்கூடாது அக்கா..."—செல்விழியின் முகம் செக்கர் வானம் போல் சிவந்தது.

"ஏன்?"—புனிதம் வியப்போடு வினவினாள்.

"இன்னும் விளங்கவில்லையா...அக்கா...?"—அவளுடைய விழிகள் தரையை நோக்கின.

"என்னம்மா...புதிர் போடுகிறாய்! விளக்கமாக சொல்லு"

"நான்...உங்கள்...தங்கை...! அவர் என் வீட்டில் தானிருக்கிறார்"

அவ்வளவுதான்! தன் இரு கரங்களாலும் இரு செவிகளையும் பொத்திக்கொண்டு படுக்கையில் போய்ப் பொத்தென விழுந்தாள் புனிதம். விவரிக்க முடியாத வேதனை அவள் முகத்திலே படர்ந்து. உள்ளத்திலே நிறைந்தது.

'ஏன் இதைச் சொன்னோம்' என்றாகிவிட்டது செல்விழிக்கு. புனிதத்தின் சூடேறிய நெற்றியிலே தன்னுடைய மெல்லிய விரல்களை வைத்துத் தடவிக் கொடுத்தாள். கூந்தலைக் கோதி விட்டாள் ... அன்புடன்!

புனிதமோ மூடிய கண்களைத் திறக்கவில்லை. சேல் விழியின் முகத்தைப் பார்க்கக்கூட நாணினள். எப்படிப் பட்ட நாணம் அது?

3

மறுநாட் காலை! உறக்கம் தெளிந்த பறவைகள் இன்னிசை முழக்கின. கீழ்வானக் கோட்டிலே பகலவன் ஒளி பரப்பிகிளம்பிக்கொண்டிருந்தான். அழகன் புனிதத்தின் வீடு தேடிவந்தான். வீட்டின் வாயிற் புறத்தே புனிதத்தின் தோழி 'குமுதம்' நின்று கொண்டிருந்தாள். சினத்தால் அவளது முகம் சிவந்திருந்தது.

"என்ன குமுதம்! என் மேல் கோபமா?" என்று ஒன்றும் தெரியாதவன் போலக் கேட்டுக் கொண்டே வந்தான் அவன்.

"இல்லை... இல்லை! உங்களைப் பார்த்து ஊர்சிரிக்கிறது. அதைப் பார்க்கப் பார்க்க எங்களுக்கு மகிழ்ச்சி தான்"

"எதைக்கண்டு ஊர் சிரிக்கிறது?"

"என்னைக் கேட்கிறீர்களா? இத்தனை நாட்கள் நீங்கள் எவளுடைய அரவணைப்பிலே புனிதத்தை மறந்து கிடந்தீர்களோ ... அவளைக்கேளுங்கள் ..."

அழகன் விழித்தான்; அவன் முகம் வெளுத்தது.

குமுதம் தொடர்ந்தாள்: என்ன விழிக்கிறீர்கள்? மறைத்து விடலாம் என்று மனப்பால் குடிக்க வேண்டாம். அவளே இங்கு வந்தாள். நட்ட நடுநிசியில் அல்ல! பட்டப் பகலில் வந்தாள்! வந்தவள் பேசாமல் போயிருக்கக் கூடாதோ? புனிதத்தைப் புகழ்ந்தாள்! 'நானும் உன் தெருவில் தான் வசிக்கிறேன்' என்றாள். அத்தோடு விட்டாளா? அயலார் மனைக்கு உரியவள் அல்லேன் என்றாள்; 'அக்கா, அக்கா' என்று புனிதத்தை ஆயிரந்தடவைக் குழைந்து குழைந்து கூப்பிட்டாள்.

"உங்களுக்கு இதெல்லாம் புதிராகத்தானே ... தோன்றியது?" என்று சிரித்துக்கொண்டே கேட்டான் அழகன்.

"ஆண்களே புதிராக இருக்கும் போது, இதுவும் எங்களுக்குப் புதிராகத் தோன்றுவது வியப்பல்லவே..."

"ஏ ... வாயாடி. போதும்! போதும் உன் சொற்பொழிவு! எங்கே புனிதம்?"

"ஆயாடி! எத்தனைக் கவலையோடு தேடுகிறீர்கள்! அவள் நேற்று படுக்கையில் படுத்தவள் தான் ... எழுந்திருக்கவே இல்லை!"

"ஏன் ... அவள் உடம்புக் கென்ன?" என்று அவசரமாகக் கேட்டான் அழகன்.

"உங்களுக்கே இல்லாத நாணம் அவளுக்கு வந்து விட்டதாம்! அன்றோர் நாள் ... மற்போர் பார்க்க போயிருந்தோமே நினைவிருக்கிறதா?

"ஆமாம் நினைவிருக்கிறது...!"

"சூளுரைத்த 'கணையன்' அவனுடைய நண்பன் ஆரியப்பொருநன் தோற்றதும் ... என்ன ஆனான்?"

"நாணித்தலை குனிந்தான்; அழுதான்; பைத்தியம் பிடித்தவன் போலானான். ஏன் அதற்கும் இதற்கும் என்ன தொடர்பு ...?"

"நேற்று...உங்கள் 'சேல் விழி' இங்கு வந்து நல்லன கூறி, நானும் உன் சேரியில் உள்ளவள் தான்; அயலான் மனைவி அல்லேன்; உன் தங்கையும் ஆவேன் ... என்று சொன்னபோது, கணையன் நாணியாங்கு புனிதமும் நாணித் தலை குனிந்து நிலை குலைந்தாள்" என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே ... புனிதம் அங்கு வந்தாள்...!

"அத்தான் ...!"

"புனிதம்...!"

அந்த இரண்டு குரல்கள் தான் ஒரே சமயத்தில் இழைந்து கேட்டன. அப்புறம் பேச்சில்லை...! பிரிந்தவர்

கூடினால் பேசவும் வேண்டுமோ? குமுதம் எங்கோ சென்று மறைந்தாள்! இன்பத்துக்குக் கேட்க வேண்டுமா?

4

கற்பனை கதையல்ல இது! அகநானூறு தரும் அழகிய காட்சி! தலைவியை மறந்து ஒரு தலைவன் 'பரத்தை' ஒருத்தியோடு சேர்ந்து இன்பந்துய்க்கிறான். அதை அந்தப் பரத்தையின் வாயிலாகவே அறிகிறாள் தலைவி! பரத்தையைக் கண்ட தலைவி - ஊரிலே எழுந்த அலரெல்லாங் கேட்ட தலைவி - கோபப் படவில்லை! தாபப்படவில்லை! நாணுகிறாள் எப்படி நாணுகிறாள்? 'ஆரியப் பொருநன்' கிடந்த கிடக்கையைக் கண்டு "கணையன்" நாணியது போல் நாணுகிறாள்.

அங்கே மற்போர்! தன் நண்பன் தோற்று விட்டதிலே கணையனுக்கு நாணம்!

இங்கே காதற் போர்! தானே தோற்றுப்போய் விட்டதில் தலைவிக்கு நாணம்!!

'பரணர்' காட்டும் அந்தக் காட்சியை நீங்களுந்தான் பாருங்களேன்:

பொய்கை நீர்நாய்ப் புலவு நாறுஇரும் போத்து
வாளை நாளிரை தேடேம் ஊர,
நாணினேன் பெருமயானே பாணன்
மல்லடு மார்பின் வலியுற வருந்தி
எதிர் தலைக் கொண்ட ஆரியப் பொருநன்
நிறைதிறண் முழவுதோள் கையகத் தொழிந்த
திறன் வேறு கிடக்கை நோக்கி நற்போர்க்
கணையன் நாணியாங்கு மறையினள்
மெல்ல வந்து நல்ல கூறி
மையீர் ஓதி மடவோய் யானு நின்
சேரியேனே அயலி லாட்டியேன்
நுங்கை யாகுவென் நினக்கெனத் தன்கைத்
தொடுமெணி மெல் விரல் தண்மணனத் தைவர
நுதலும் கூந்தலும் நீவிப்
பகல் வந்து பெயர்ந்த வாணுதற் கண்டே.

—பரணர் (அகம் 386)

வாழ்த்து

கற்பனையில் பேர்பெற்று காவியத்தின் பூங்கொடியாய்
விற்பன்னர் கையெழுத்தால் வீறுகொண்டு-பொற்புடைய
ஓவியத்தார் போற்றுமுயர் கன்னித் தமிழே
பூவின் மணமேனீ வாழ்!

சொல்லு பாப்பா

மதியினிலே மானிருக்கு சின்னப்பாப்பா—ஓமோம்
நதியினிலே மீனிருக்கு தம்பிப்பாப்பா
நதியினிலே மதியைக்காட்டி நயமுடனே சாதம் ஊட்டும்
மதிகொண்டவர் யாரென்றுநீ சொல்லுபாப்பா?

உண்மையிலே உயர்விருக்கு சின்னப்பாப்பா—நல்ல
பெண்மையிலே பண்பிருக்கு தம்பிப்பாப்பா
உண்மையின்மை துணமுரைத்து உன்னையன்பாய்
(நேசித்திடும்
பெண்மைத் தெய்வம் யாரென்றுநீ சொல்லுபாப்பா?

பாட்டுதனில் பண்பிருக்கு சின்னப்பாப்பா—நல்ல
ஆட்டமதில் அழகிருக்கு தம்பிப்பாப்பா
பாட்டமாட்டம் கொண்டுனக்குப் பாலுஞ்சோறு
(ஊட்டுகின்ற
நாட்டமுள்ள தெய்வமேது சொல்லுபாப்பா?

"நடராஜரன்"

தியாகம் தேவை

டாக்டர் மு. வரதராசன்

இந்த நாட்டுக்கு ஒரு பொது மொழி தேவை. அதில் யாருக்கும் ஐயப்பாடு இருக்க காரணம் இல்லை. ஏன் எனில், இந்த நூற்றுண்டில் உலகமே ஒரு குடும்பம்போல் வாழ வேண்டி ஏற்பட்டுள்ளது. உலகம் பரந்த பெரிய உலகந்தான். ஆனால் விஞ்ஞான வளர்ச்சியால் ஏற்பட்டுள்ள போக்கு வரவுக் கருவிகளும் செய்தி பரவும் விரைவும் பழகுதற்கு உற்ற வாய்ப்புக்களும் சேர்ந்து, பெரிய பரந்த உலகத்தைச் சிற்றூர் போல் ஆக்கிவிட்டன. ஆகவே, இனி எந்த நாடும் தன்னளவில் தனித்து ஒதுங்கி வாழமுடியாது. அடுத்துள்ள நாடு நட்புள்ளதாக இருக்காமல் பகையான நாடாக இருப்பினும், தூதரை அனுப்பிப் பேசவும் உடன்படிக்கை முதலியன நிகழ்த்தவும் ஒரு பொது மொழி தேவையாகின்றது. ஒரு மாநிலத்தார் மற்றொரு மாநிலத்தாருடன் உறவு கொண்டு பழகுவதற்கும் பொது மொழி தேவை; அல்லது, பகைகொண்டு போராடுவதற்கும் பொதுமொழி தேவை.

பெரிய துணைக்கண்டம் போல் உள்ள இந்தியாவில் உள்ள பல நாடுகள் அல்லது மாநிலங்களாகிய இவற்றிற்கும் ஒரு பொதுமொழி எது என்பது நெடுங்காலமாக எண்ணிப் பேசப்பட்டு வந்தது. இந்திய அரசியல் சட்டம் (Indian Constitution) வகுத்தவர்கள் கூடி, அந்தப் பொதுமொழி இந்தி என முடிவு செய்தனர்.

“இந்தியைப் பொது மொழி எனக் கொள்வதில் பல மாநிலத்தார்க்கு எந்த வகையான இடர்ப்பாடும் இல்லை.

வடக்கே உள்ள பல மாநிலத்தார் இந்தியே தாய்மொழியாகக் கொண்டவர்கள் ஆகவே, தங்கள் தாய்மொழி இந்தியாவின் பொது மொழியாகின்றது என்பது அவர்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதாகும். தன் தாய் அரசியாகின்றாள் என்று கேள்வியுறும் மக்களைப்போல் அவர்கள் பூரிப்படைய இடம் உண்டு. முப்பது கோடிக்கு மேற்பட்ட தொகையினராகிய மக்கள் பொதுமொழியாக போற்றுவதையே தங்கள் தாய்மொழியாகக் கொண்டவர்கள் உண்மையாகவே 'பாக்கியவான்கள்' எனக்கூற வேண்டும். அவர்கள் தங்கள் தாய்மொழியை மட்டும் கற்பதால், ஒரு பெரிய நாட்டில் மூலை முடுக்கெல்லாம் சென்று பழகவும் வாணிகம் செய்யவும், ஆட்சி நடத்தவும் தடையில்லாத பெருவாய்ப்பைப் பெறுகின்றார்கள். இத்தகைய பொதுமொழி சில ஆண்டுகளில் மிக வேகமாக வளரக்கூடிய ஆற்றல் நிறைந்து, அறிவு நூல்கள் பலவற்றையும் பெற்று விளங்கும் ஆசையால், அடுத்த தலை முறையில் வரும் அவர்களின் மக்கள் அவர்களைவிடப் பெருமைப்படுவார்கள். தங்கள் தாய்மொழி பரந்த பெரிய நாட்டின் மொழி என்பது மட்டும் அல்லாமல், அறிவு நூல்கள் பல பெற்று அறிவை வளர்க்கும் சிறப்புள்ள மொழி என்றும் அடுத்த தலைமுறையார் மகிழ்வார்கள்.

ஒரு சிறு நாட்டின் பண்படாத மொழியாக இருந்த ஆங்கிலம் இப்படித்தான் வேகமாக வளர்ந்து இன்று உலக மொழியாக—அறிவு மொழியாக—விளங்குகின்றது. ஆங்கிலேயரின் ஆட்சி பல நாடுகளிலும் பரவி, பல நாட்டு மக்களின் அரசியல் மொழியாக விளங்கிய காரணத்தால் தான் ஆங்கிலம் வேகமாக வளரத் தொடங்கியது என்பதையும், அதன் பிறகே அறிவு நூல்கள் அந்த மொழியில் கணக்கின்றிப் பெருகிவிட்டன என்பதையும் இங்குக் கருத வேண்டும். பதினெட்டாம் நூற்றாண்டிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இங்கிலாந்தில் இருந்த பள்ளிக்கூடங்கள் லத்தீன் பள்ளி (Latin School) என்று அழைகப்பட்டு வந்தன. அந்தப்பள்ளியில் படித்தவன் தான் கல்வி பெற்றவனாகக் கருதப்பட்டு வந்தான். லத்

தீன் அல்லது கிரேக்க மொழி படிக்காமல், தாய்மொழியாகிய ஆங்கிலம் மட்டும் படித்த ஆங்கிலேயர்க்கு மதிப்பு இல்லாமலிருந்த காலம் அது. அதே இங்கிலாந்தில் இன்று ஆங்கிலம் ஒன்று மட்டும் படித்து, உலகத்தை ஆட்டிவைக்கும் கருத்து வளம் பெற்ற எழுத்தாளரும் பேச்சாளர்களும் இருந்து வருகின்றனர். ஒரு காலத்தில் லத்தீன் மொழியும் கிரேக்க மொழியும் பண்பாடு உள்ள மொழிகளாகக் கருதப்பட்டு, தாய் மொழியாகிய ஆங்கிலம் பண்பாடு அற்றதாக அங்கே கருதப்பட்டு வந்தது.

இன்று இந்தியும் இலக்கியப் பண்பாடு அற்ற மொழியாக உள்ளது; ஆயினும், பலகோடி மக்கள் அதைப் பொதுமொழியாக ஏற்றுச் செல்வாக்குத் தந்தால் சில தலைமுறையில் இதுவே வேகமாக வளர்ந்து சிறப்புள்ள மொழியாக விளங்க முடியும். அன்று இங்கிலாந்தில் லத்தீன் கிரேக்க மொழிகள் சிறந்து நின்றது போல், இன்று இங்கே வட மொழி, வங்காளி, தமிழ், தெலுங்கு முதலியவை சிறந்து நிற்கலாம். ஆனால் சில தலைமுறைகளில் இந்தி இவற்றை விட வேகமாக வளர்ந்து முன்னிற்க முடியும்.

ஆகவே இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள், அது பொது மொழியாக ஏற்படுவது குறித்துக் களித்துக் கூத்தாடலாம். ஆனால் மற்றவர்கள் நிலை என்ன?

மற்றவர்கள் தங்கள் தாய்மொழியாக வங்காளி, தமிழ், தெலுங்கு முதலிய மொழிகளில் ஒன்றைக் கற்க வேண்டும்; அதோடு இந்தியாவின் பொது மொழியான இந்தியையும் கற்கவேண்டும். இப்படி இருமொழி கற்பவர்கள், இருமொழியிலும் நல்ல தேர்ச்சி பெறமுடியாது. யாரோ ஒரு சிலர் மட்டுமே அத்தகைய தேர்ச்சி பெறமுடியும். தாய்மொழியை நன்கு கற்பவர்கள் பொது மொழியில் திறமை இல்லாமல் தடுமாறுவார்கள். தாய்மொழியைப் புறக்கணிக்கின்ற துணிவு உடையவர்கள் மட்டுமே பொது மொழியில் திறமை பெறுவார்கள். (கான்வெண்ட் பள்ளிகளில் படித்துத் தமிழைப் புறக்கணித்து ஆங்கிலத்தைக் கற்பவர்கள்

ஆங்கிலத்தில் திறமை பெறுவது போல், தமிழைப் புறக்கணித்து இந்தியைக் கற்பவர்கள் மட்டுமே இந்தியில் தேர்ச்சி பெறமுடியும். விதி விலக்காக ஒரு சிலர் இருமொழியிலும் திறமை பெறக்கூடும். அப்படிப்பட்டவர்கள் பதினாயிரத்தில் ஒருவர் இருவர் இருக்கலாம். மற்றப்பெரும்பாலோரால் அது இயலாது) சிறந்த அறிஞர்களாலேயே (Bernard Shaw, H. G. Wells.) இருமொழிப் புலமை பெறமுடியாமற் போனது. ஆகவே அனைவரும் இருமொழியும் கற்று வல்லவர்களாக முடியும் என்று எதிர்பார்த்தலாகாது.

இவ்வாறு இருமொழி கற்பதோடு கடமை தீர்ந்து விடுமா எனின், அது தான் இல்லை. உலக மொழியாகிய ஆங்கிலமும் கற்காவிடின், அறிவு வளர்ச்சியில் குறையாக நிற்கும் நிலைமை உள்ளது. ஆகவே ஆங்கிலமும் மூன்றுவது மொழியாக கற்றுத் தீர வேண்டும். இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இந்தியும், ஆங்கிலமுமாக இருமொழி கற்றுப் போதும் என அமையலாம். தமிழர் முதலானை மற்றவர்களோ, தாய்மொழி, இந்தி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் கற்றுத் தீர வேண்டும்.

ஐரோப்பிய நாடுகளில் பலர் மூன்று மொழிகள் கற்கின்றனர். ஆனல் அவர்கள் மூன்று வகையான வேறுபட்ட எழுத்துக்களைக் கற்பதில்லை. ரோமன் எழுத்து முறை ஒன்று (A B C D முதலியவை) கற்ருல் போதும். அந்த ஒரு வகை எழுத்து முறைக்கொண்டே ஆங்கிலம், பிரெஞ்சு, முதலான பல மொழிகளையும் ஐரோப்பிய நாடுகளில் கற்க முடிகின்றது. தவிர, அந்த மொழிகளின் சொற்கள் பல பொதுவான சொற்கள்; ஆகவே ஒத்த சொற்களைக் கற்பதில் முயற்சியும் குறைகிறது. இந்தியாவில் மூன்று மொழி கற்பவர்க்கு இந்த நன்மை இல்லை; அவர்கள் வேறுபட்ட மூவகை எழுத்துக்களைக் கற்க வேண்டும். தமிழ் எழுத்து, தேவநாகரி எழுத்து, ஆங்கில எழுத்து மூன்றும் கற்ருல் தான் தமிழன் ஒருவன் மூன்று மொழிகளைக் கற்க முடியும். இந்த எழுத்து முறைகள், மூன்றும்

மூன்று வகையானவை என்பது மட்டும் அல்ல; ஒலிகளும் வேறுபட்டவை; சொல்லமைப்பும் வேறுபட்டவை; இலக்கண முறைகளும் ஒன்றுக்கொன்று புறம்பானவை. ஆகவே மூன்று மொழி கற்பதில் இங்குள்ள இடர்ப்பாடு கொஞ்சம் அல்ல.

இத்தகைய சிக்கலைத் தீர்க்க வழி இரண்டு. ஒன்று துணிவு; மற்றொன்று தியாகம்.

'இந்தியா பல மொழியினர் வாழும் நாடு. பெரும்பான்மையான மக்கள் பேசும் மொழி இந்தி. பெரும்பாலோருக்கு நன்மை செய்தால் போதும், சிறுபான்மையோர் துன்பப்படவேண்டியது அவர்களின் தலைவிதி' என்று ஆள்வோர் துணியவேண்டும். ஆகவே, பெரும்பான்மையோருடைய மொழியே எல்லோருடைய மொழியாகவும் ஆக்கிவிட வேண்டும். அதைச் செய்வது எவ்வாறு? வன்பு முறையில் சிறுபான்மையோருடைய தாய் மொழியை நேரடியாகக் கொலை செய்துவிடுவது ஒரு வழி; அதாவது அந்தச் சிறுபான்மையோருக்குப் பள்ளிக்கூடத்தில் தாய்மொழி கற்பிப்பதற்குத் தடை விதிக்க வேண்டும். தாய்மொழிப் பள்ளிகளை மூட வேண்டும். அதனால் அந்தத் தாய்மொழிகள் விரைவில் மறையும்; எல்லோருக்கும் இந்தியே தாய்மொழியாக ஆகிவிடும். அல்லது, மறைமுகமான முறையில் சிறுபான்மையோருடைய தாய்மொழிகளைக் கொலை செய்துவிட வேண்டும்; அதாவது, பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் அலுவலகங்களிலும் இந்திக்கு முதலிடமும் சிறப்பும் சலுகையும் கொடுத்து, தாய்மொழிகளை உள்ளபடியே விட்டுவிட்டால், அவைகள் தாமாகவே படிப்படியே செத்து ஒழியும். இந்த இரண்டும் செய்யத் துணிவு வேண்டும்.

பெரும்பாலோர் வாழ்வதற்காகச் சிறுபான்மையோரின் உரிமைகளை நசுக்குதல் கூடாது என்று அறநெஞ்சம் கொண்டவர்களுக்கு மேற்கூறிய துணிவு வராது. அவர்கள் அந்த வன்பு நெறியான துணிவை மேற்கொள்ளாமல், அன்பு நெறியான தியாகத்தை மேற்கொள்ள வேண்டும்.

சிறுபான்மையோராகிய தமிழர் முதலியவர்கள் மூன்று மொழி கற்கும் தொல்லையைக் குறைத்து இரு மொழி கற்குமாறு இசையவேண்டும், அதற்கு வழி: உலக மொழியாகவும் அறிவு மொழியாகவும் வளர்ந்துள்ள ஆங்கிலத்தையே இந்தியாவின் பொது மொழியாகவும் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு ஏற்றால், இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட வரும் இந்தி, ஆங்கிலம் ஆகிய இருமொழி கற்கவேண்டும்; மற்றவர்களும் தங்கள் தாய் மொழியும் ஆங்கிலமுமாகிய இருமொழி கற்கவேண்டும். ஆங்கிலம் ஆங்கலேயருடைய மொழி மட்டும் அல்ல; அறிவு வேட்கைகொண்ட அனைவருக்கும் உரியமொழியாகவளர்ந்து விட்டது. இன்று ஆங்கிலம் கற்காத நாடே இல்லை. ஆகையால் நாம் அதனை ஏற்றுக் கொள்ளுவதால் தீமை ஒன்றும் இல்லை; நம் சுதந்திரத்துக்கும் இழுக்கு இல்லை. உலகம் ஒரு குடும்பமாக வளரும் வளர்ச்சிக்கு நாமும் துணை செய்தவர்கள் ஆவோம்; உலக முற்போக்கை நாம் என்றும் விடாமல், பின் தங்காமல் பயன் பெறவும் முடியும். பெரும்பான்மையோராகிய 'இந்தி' மக்கள் இதற்கு இசைய வேண்டுமே. பொதுநன்மையைக் கருதி, தம் தாய்மொழிக்கு வரக்கூடிய பெருமையை விட்டுக்கொடுக்க வேண்டுமே. அந்தத் தியாகம் அவர்களிடம் எதிர்பார்க்க முடியுமா?

அல்லது:

'பொது மொழி' என்ற தொடரை நேர்ப்பொருளில் பயன்படுத்தி, ஒரு மாநிலத்தார் மற்றொரு மாநிலத்தாருடன் பழகவும் எல்லா மாநிலத்தாருடன் பழகவும் எல்லா மாநிலத்தாரும் மத்திய அரசாங்கத்துடன் பழகவும் உரிய அளவில் மட்டும் இந்தியை வழங்க வேண்டும். அவ்வாறானால், ஒரு மாநிலத்து (மாகாணத்து)த் தலைமை நிலையத்தில் மட்டும் இந்தி மொழிபெயர்ப்புத் தெரிந்த சிலர் இருந்தால் போதும் மிகுதியாகத் தேவை எனினும், அலுவலகங்களில் டைப் அடிக்கத் தெரிந்தவர்கள் ஒரு சிலர் இருப்பது போல், மத்

திய அரசாங்கத் தொடர்புக்காக ஒரு சிலர் இந்தி மொழி பெயர்ப்பில் தேர்ச்சி பெற்றவர்களாக இருந்தால் போதும். ஆகவே, நாட்டில் பிறந்த எல்லோரும் இந்தி படித்துத் தேறியவர்களாக இருக்க வேண்டியதில்லை; பள்ளிக்கூடங்களில் இந்தி கட்டாயப் பாடமாக இருக்கலாம்; மொழிக் கல்வியில் ஆர்வம் உள்ள சிலர் மட்டும் அப்போது இந்தி படிக்கலாம். கணக்குக் கற்பதில் ஒரு சிலர்க்கே ஆர்வம் உண்டு; ஒரு சிலர்க்கே ஆற்றலும், திறமையும் இயல்பாக அமையும்; அதுபோல் இரண்டு மொழி, மூன்று மொழி கற்கும் திறமையும் ஆர்வமும் சிலருக்கே உண்டு. அவர்கள் மட்டும் ஆங்கிலமும் இந்தியும் கற்றால் போதும் என்ற அமைதி பெறலாம். எல்லோருக்கும் பல மொழிக் கல்வியைத் திணிக்க வேண்டியதில்லை. அதோடு, பொதுமொழி என்பது இந்த நோக்கத்தில் அமைபுமானால், தபால் கார்டுகளிலும், மணியார்டர் தாள்களிலும் பிறவற்றிலும் இந்தி கட்டாயமாக்கப்பட வேண்டியதில்லை; மத்திய அரசாங்கத் தொடர்புள்ள அலுவலகங்களில் மட்டும் நின்றுவிடலாம். ஆனால், சிறு பான்மையோரின் நலம் கருதித் தங்கள் தாய்மொழியைப் பரப்பும் வேட்கையைக் கைவிட முடியுமா? அத்தகைய தியாக மனப்பான்மை வடநாட்டார்க்கு வருமா?

அல்லது:

ஐரோப்பிய நாடுகளில் பலமொழி கற்போருக்கு உள்ள நன்மையையாவது இங்கே ஏற்படுத்த வேண்டும்; அதாவது, ஒரே எழுத்து முறை கொண்டு அந்த மூன்று மொழியும் கற்கச் செய்ய வேண்டும். அப்படியானால், எந்த எழுத்து முறையைப் போற்றுவது என்ற சிக்கல் எழுகின்றது. இந்தியாவில் பெரும்பான்மையோருடைய எழுத்து முறை தேவநாகரி. உலகத்திற்கு பொதுவாக வளர்ந்து பரவியுள்ள எழுத்து முறை. ரோமன் முறை. இந்த இரண்டில் எதைப் போற்றுவது? பண்டித நேரு ஒரு காலத்தில் ரோமன் எழுத்தால் இந்தியும் கற்றுக் கொள்ளலாம் என்று கூறியவர்

இந்திய தேசிய இராணுவம் நிறுவியவர் (Subash Chandra Bose) காங்கிரசின் தலைமையுரையை ஆற்றிய போது, ரோமன் எழுத்தால் இந்தி எழுதப்பட வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளார். இராணுவத்தில் உள்ளவர்களுக்கு ரோமன் எழுத்துக்களால் இந்தி கற்பிக்கும் முறை நெடுங்காலமாக இருந்து வருகிறது. ஆனால் இன்று எடுத்து சொல்ல ஆள் இல்லை. காரணம், பலர்க்கு மொழிவெறி எழுத்து வெறியளவிற்கு வளர்ந்துள்ளது. 1, 2, 3 என்ற பழகிய எண்களையும் தேவ நாகரி எண்களால் எழுத வேண்டும் என்று எழுத்து வெறி பெருகியுள்ள நாடு இது. இந்த நிலையில் தேவ நாகரி எழுத்து வேண்டாம் என்று கூற முற்படுகின்றவர் வெறியாளரின் குண்டுக்கு இரையாகும் நெஞ்சத் திட்பம் உடையவர்களாக இருக்கவேண்டுமே. காந்தியடிகளுக்குப் பிறகு அந்தத் திட்பம் குறைந்து வருகிறது. வெறியர் கை ஓங்கி வருகின்றது. நடுநிலையாளரின் வாயும் அடங்கி வருகின்றது. கவிதை தவிர மற்ற எல்லாவற்றையும் ஒரு மொழியிலிருந்து மொழி பெயர்த்துப் படித்தால் போதும் என்ற தெளிவு வளர வேண்டிய இந்நூற்றாண்டில், வட மொழி கற்று வடமொழி இலக்கியங்களைக் கற்காதவன் நாகரிக அறிவு நிரம்பாதவன் என்று ‘பிரசாரம்’ செய்யப்பட்டு வருகிறது. நாட்டின் பொது மொழியாக, ஆட்சி மொழியாக விளங்க வேண்டும் என்று பல்கலைக்கழகப் பேச்சுக்களில் வற்புறுத்தப்பட்டு வருகிறது. மொழி வெறி இந்த அளவிற்கு வளர்ந்து வரும் இந்நாளில், அதன் மகவாகிய எழுத்து வெறியைத் தணிக்க வழி என்ன? வல்லொலிக் ககரம் மெல்லொலிக் ககரம் இந்த இரண்டு ககரங்கள் போதும், ‘ஹகர’ ஒலியுடன் கூடிய வேறு இரண்டு ககரங்கள் வேண்டியதில்லை அவை இல்லாமலே மொழி விளங்க முடியும் என்று காரணங்கள் எடுத்து விளக்கினாலும் ஆத்திரம் கொண்டு குற்றம் சாட்டுகின்றவர்கள், உங்கள் எழுத்து வேண்டாம் என்றால் பொறுத்திருப்பார்களோ? அச்சுக்கும் டைப்புக்கும் இடையூறான கூட்டெழுத்துக்களை விட்டுவிடுங்கள் என்று முறையிட்டால் சினந்து கூக்குரலிடுகின்ற வெறியுடைய அவர்கள், தேவ நாகரியை விட்டு விட்டுச் சிற்சில

மாறுதல்கள் செய்துகொண்டு ரோமன் எழுத்தில் எழுதுங்கள் என்று சொன்னால், சொல்வதைக் கேட்கப் பொறுமையாவது இருக்குமோ? சிறுபான்மையோரின் நலம் கருதி இந்தச் சிறு தியாகமாவது செய்தல் கூடாதா?

சிறு தியாகமும் செய்யப் போவதில்லை எனின், இந்த நாட்டில் எல்லோர்க்கும் ஒத்த உரிமை உண்டு என்று சொல்லாமலிருப்பது நல்லது. எல்லோர்க்கும் ஒத்த உரிமை வழங்கும் நாடு இது என்று உலகத்தில் பறையறைந்து புகழ்பெற முயலும் முயற்சியையாவது நிறுத்த வேண்டும். அந்தப் புகழையாவது தியாகம் செய்ய வேண்டும்.

சூரிய காந்தி !

கவி "தமிழழகன்"

மாலை வெயில்முகம் பூசினேன்;—அவன்
மாணிக்கக் குங்குமப் பொட்டிட்டான்!
கோலமை கண்ணுக்கு வேண்டினேன்;—இருள்
குழைத்ததை என்னிடம் நீட்டினான்!
சேலை குளிர்மூடக் கேட்டேன்யான்;—உடனே
சிகினாப்பூப் போட்டவான் காட்டினன்—சரி
காலை வருகிறேன் என்றுதான்—சென்றான்;
காணேன்; ஏ மாற்றினன் சூர்யனே!

அவர் அறிஞரா?

சொ. வேலாயுதம்

தமிழகத்தில் பணிபுரிந்தோர் பலர். அந்நிய நாட்டினர் கூட நந்தமிழ் மொழியின் நலங்கண்டு அதைக் கற்றுத்தேர்ந்து, ஆய்வுகள் பல நடத்தி தொண்டுகள் பல புரிந்து தமிழ் நாட்டின் பெருமையை மேனாட்டுக்கு விளக்கினார்கள். அவர்களுள் கால்டுவெல் ஐயர் – (அறிஞர்) ஒருவராவர். திராவிட மொழிகளின் உண்மை – ஒற்றுமை – பழமை இவைகளை கண்டு – 'திராவிட மொழிகளின்' ஒப்பிலக்கணம் என்ற அரிய நூலை இயற்றி அழியாத புகழினையும் – 'திராவிட உண்மையை' நமக்கு விட்டுச் சென்றவர் அவரேயாவர். அவரது வாழ்க்கை உணர்ச்சி மிகுந்தது. ஊக்கம் செறிந்தது. தொல்லைகள் பல கொண்டது. வெற்றிகள் பல உள்ளது. இவைகளை நாம் அறிதல் அவசியம். நந் தமிழ் நாட்டிற்கு அரும்பணியாற்றிய ஒரு அன்னியனை பற்றி நாம் தெரிந்திருத்தல் நல்லது.

வாழ்க்கை:

கால்டு வெல்லின் தாய் தந்தையர் காட்லாந்து நாட்டினர். அவர்கள் அயர்லாந்தில் வாழ்ந்த போது, பத்தொன்பதாம் நூற்றாண்டின் முன் பகுதியில் கால்டுவெல் தோன்றினார். இளமையில் ஊக்க உணர்ச்சி நிரம்ப பெற்றவர், கல்வியில் சிறந்து விளங்கினார். ஆங்கில இலக்கியத்தின் கரை கண்ட பின்பு, ஒரு கவின் கலைக்கல்லூரியில் சேர விரும்பினார். ஆதலின் அவர் டப்ளின் கல்லூரியில் ஓவியம் கற்றார். பின்பு சமய பணி புரிய எண்ணி கிளாசுகோ பல்கலைக்கழகத்தில் தம் இருபதாவது வயதில் கல்வி கற்க ஆரம்பித்தார். அங்கு பி. ஏ., பட்டம் பெற்று பரிசுகள் பல கொண்டார். பின்பு சமயத் தொண்டர் கழகத்தினர் – கால்டு வெல்லை இந்தியாவிற்கு அனுப்பினர்.

தமிழ்க்கல்வி:

அந்த காலத்தில் ஆட்பிரிக்காவை சுற்றித்தான் இந்தியாவை அடைய வேண்டும். நான்கு மாதம் பிடிக்கும் பிரயாணம் முடிய; வின்சுலோ என்ற ஈழநாட்டு (இலங்கை) பாதிரியாரிடத்தும் 'ஆண்டர்சன்' என்னும் அறிஞரிடத்தும் பழகினர். தமிழில் புதுமையான உணர்ச்சியினை பெற்றார்.

சமூகத்தொண்டு:

முதன் முதலில் திருநெல்வேலி மாவட்டத்தில் சமய பணி புரிய புறப்பட்டார். சென்னைக்கும், நெல்லைக்கும் ஏறக்குறைய நானூறு மைல் தூரம் இருக்கும். அதனை நடந்தே செல்வது என முடிவு கொண்டார். இயற்கை காட்சிகளை கண்டுகளித்தார். தமிழகத்தின் வளமையைக் கண்டார். சோழ நாட்டின் கோயில் சிறப்பைக் கண்டார். இவ்விதமாக நீலகிரியை அடைந்தார். இங்கு பாதிரியாக பணிபுரிந்து வந்தவரின் விருந்தினராய் விளங்கினர். பின்பு இடையன் குடியைத் தேர்ந்தெடுத்தார் தன் வாழ்விடமாக. திருநெல்வேலி நகருக்கு தென்கிழக்கில் உள்ள இவ்வூரின் வெப்ப நிலையில் கால்டு வெல் கடும்பணி புரிந்தார். குளிர் நாட்டிலிருந்து வந்த அவர் பணியே பெரிதெனக் கருதா விடில் அவ்வெப்பத்தில் உழலுவாரா? இடையன் குடியில் இருபள்ளிகள் தோன்றின. பெண் பள்ளியை கால்டு வெல் வின் மனைவியான 'எலிசா' நடத்தினர். இடையன் குடி மக்கள் சிறந்தவர் ஆனர்கள். ஏசுவின் குரல் ஏழைகளின் உள்ளத்திலே ஒலித்தது. கால்டு வெல் பாதிரியாக ஆக்கப் பட்டார்.

ஆராய்ச்சி:

அருமையான ஆராய்ச்சி உள்ளம் கொண்டவர் அவர். அதனால் அவர் தமிழ் நாட்டு வாணிபத்தைப்பற்றி அந்நியர்

எழுதிவைத்த குறிப்புகளைக் கண்டார். அதன் பின் இரு உண்மைகளைக் கண்டார். பழைய ஃஇபுரு மொழியில் வழங்கும் 'துகி' என்னும் சொல் தமிழ் மொழியில் உள்ள தோகை என்பதன் மரூஉ என்றும் கிரீக்கு மொழியில் விளிரும் 'அசோ' என்னும் சொல் தமிழ்மொழியில் உள்ள 'அரிசி'யின் சிதைவென்றும் கண்டார். புதை பொருள் ஆராய்ச்சி பல நடத்தி தமிழரின் பழம்பண்பை விளக்கினர். கொற்கைக்கு அருகிலுள்ள 'அக்கசாலை' என்ற ஊரைபற்றி அவர் கூறுவது என்னவெனில் "அங்கு—பழைய மன்னர்கள் பொற்காசுகள் முதலிய நாணயங்கள் செய்ததமையால் அவ்வூர் அக்கசாலை (Mint) எனப்பட்டது." பின் கொற்கை, பழங்காயல் முதலிய—கடற்கரை ஊர்களை பார்வையிட்டார். 'பழங்காயல்' என்பது மார்க்கோபோலோ நூலில் குறிப்பிட்ட ஊர்தான் என்று கண்டார். தமிழர்கள் சிறந்த கடல் வாணிகர்கள்; நாகரீகத்தில் உயர்ந்தவர்கள் எனக்கண்டார். ஆதலால் அவர் தமிழர்களை கீழ் நாட்டு கிரேக்கர் என்று புகழத்தொடங்கினர்.

தமிழ்ப்பணி :

'டாக்டர் குண்டர்டு' மலையாளத்தையும், 'கிட்டல்' கன்னட மொழியையும், 'பிரௌன்' தெலுங்கையும் ஆராய்ந்தனர் அதன் விளைவாக பல கட்டுரைகள் வெளியிடப் பெற்றன. அவர்களுடன் ஒன்றி நமது கால்டுவெல் ஐயர் தமிழை ஆய்ந்தார். அருமையான கட்டுரைகளை வெளியிட்டார்.

இயற்றிய நூல்கள் :

பதினோந்தாண்டுகள் கடுமையாக உழைத்தார். திராவிட மொழிகளின் சொல் ஒற்றுமையை ஒன்று திரட்டினர். 1856-ல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை வெளியிட்டார். பின்பு திருநெல்வேலி மாவட்டத்து வரலாற்றை வெளியிட அவர் அவா கொண்டார். கல்வெட்டுகள், கட்டடங்கள், பழம் இலக்கியங்கள் இவையெல்லாம் அவருக்கு துணைபுரிந்தன. 1881-ல் அந்நூல் அரசாங்க வெளியீடாக வெளி வந்தது. ஐயாயிரம் ரூபாய்கள் பரிசாக பெற்றார்.

பட்டங்கள் :

கிளாசுகோ பல்கலை கழகத்தார் அவரது ஒப்பிலக் கணத்தைக் கண்டு வியந்தனர். 'டாக்டர்' என்னும் பட்டத்தை அளித்தனர் அவருக்கு. அவரது ஒப்பிலக்கணம் மேல் நாடுகளில் பரவியது. இரண்டாம் பதிப்புக்கு அவசியம் ஏற்பட்டது. அவரது மருமான் 'விபட்டு' அப்போது லண்டன் பல்கலை கழகத்தில் தமிழ் பேராசிரியராக இருந்தார். அவர் உதவியால் பல திருத்தங்கள் செய்யப்பட்டு வெளி வந்தது. சமய சங்க அதிகாரிகள் அவருக்கு 'மறை நூல் அறிஞர்' (Doctor of Divinity) என்ற பட்டத்தை அளித்தனர்.

திருவிடத்தைப்பற்றி கால்டுவெல் :

திராவிடமொழி மொத்தம் பன்னிரண்டாகும். அவைகளுள் திருந்திய—மொழிகள் ஆறு. திருந்தாது இயங்குவன ஆறு. 'தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம், குடகு—இவைகள் முதல் வகை—நீலகிரியில் வாழும் தோடர்மொழி, கொண்டு வாணாவில் உள்ள கொண்டர் மொழி, ஒரிசாவில் விளங்கும் கூவர் மொழி, நடு மாகாணத்தில் வழங்கும் ஒராலோன் மொழி, வங்கத்தைச் சேர்ந்த மலர் மொழி – இவைகள் திருந்தாதவைகள். தென்னாட்டு மொழிகளுள் பண்டு தொட்டு தமிழோடு தொடர்பு கொண்டது மலையாளமேயாகும். பின்னரே வடமொழியை தழுவிக்கொண்டு இக்கால மலையாளம் கதம்பமாகிவிட்டது. தமிழ் தனித்து இயங்கும் உயர் தனிச்செம்மொழி ஆகும். பிற மொழியுடன் தொடர்புடையது அல்ல. தமிழ் புலவர்கள் வடமொழியை பெயர்த்து பல பாமாலைகளை இயற்றினர்.

கால்டுவெல் அன்னியரே! ஆம்; அவர் வெளி நாட்டார் தான். அவர் பெரிய அறிஞர்தான். ஆற்றல் பெற்ற தமிழ் அறிஞர் தான். நம் தமிழ் நாட்டிற்கு நற்பணியாற்றிய பேர் அறிஞர் தான். தீராதத் தமிழ் உணர்வால் அவர் ஆற்றிய அருந்தொண்டினைக் கண்டோம். அவரை போற்றுதற்கு தமிழ் மொழியில் சொல் இல்லை. வாழ்க அவர் புகழ்.

மின்னல்

1
பகையின்றி வானத்துப்
பந்தல் எரி யூட்டுதற்கே
முகிற்கூட்டம் விட்டெறிந்த
மூர்க்க மிகும் சுடர்ப்பந்தம்!

2
மேகவான் முற்றத்தில்
விதம் விதமாய்ச்சிறுவர்
வேகமாய் விட்ட வர்ண
விளையாட்டு மத்தாப்பூ!

3
ககன நடுக்கடலில்
கார்முகிலாம் கப்பல்கள்
தகனம் செய நடுவில்
தாவி எழும் தீப்படலம்!

4
ஏகப் பெரு வெளியில்
ஏகாங்கி வானரசன்
மேகப் புழுக்கத்தால்
மெய்விசிறு மின் விசிறி

5
கொல்லன் இல்லாத உலைக்
கூடத்தில் யாரோ ஓர்
வில்லன் நின்று காற்றூத
வீறிடும் சுடர்க் கொழுந்து!

6
மேகத் திரை நீக்கி
மெள்ள எட்டிப் பார்த்தபடி
வேகத் தொடும் நழுவும்
விண் கன்னி கண்வீச்சு!

7
வானத்துப் போர் முனையில்
வாள்மறவர் சண்டை செயத்
தான் அங்கு வாளினின்றும்
தான் தெறிக்கும் ஒளித்துடிப்பு!

8
நீள வெளியரங்கில்
நெளிந்தாடும் நேரிழையார்!
வாளித்த உடல் தூவும்
வண்ண ஒளிச் சாயல் மின்னல்!

கவி தமிழழகன்

குறள் சொல்லும் கதை

மங்கலம் மனோகரன்

கொட்டு முழக்கம் கேட்கிறது, சந்தான முதலியாரின் வீட்டில். அது அவருடைய மகள் பூப்பெய்தின நற்செய்தியைத்தான் ஊரறியச் சொல்லிற்று. நாட்கள் இரண்டு மூன்று கழிந்தன. சந்தான முதலியாரின் தமக்கை ஊருக்குப் புறப்பட வேண்டியவற்றை எடுத்துவைத்துக்கொண்டு தம்பியிடம் வந்து பேசுகிறாள்.

"தம்பி! அப்பா இறந்துபோய் இருபத்திரண்டு ஆண்டுகளாகி விட்டன. இந்த இருபத்திரண்டு ஆண்டுகளில் நீயும் எவ்வளவோ மாறிவிட்டாய். உனது திருமணத்திற்குப் பிறகு இரண்டு முறை நான் வந்தபோது நீ என்னிடம் முகம் கொடுத்தும் பேசவில்லை. என்ன கெட்டகாலமோ நம்மிருவரையும் இப்படிப் பிரித்துவிட்டது. எது எப்படிப் போனாலும் சரி, போனதெல்லாம் போகட்டும். இன்றாவது நான் சொல்வதைக் கேட்பாயோ?"

"என்ன? சொல் சீக்கிரம்! நானும் சீதையும் பானு முதலியார் வீட்டுத் திருமணத்திற்குச் செல்லவேண்டும்."

நீ சம்மதித்துக் கொள்ளுவாய் என்ற நோக்கத்தோடு சொல்லுகிறேன். உன் மகள் சிங்காரியை என்மகன் இளவழகனுக்குக் கட்டி வைத்துவிட்டாயானால் நம்முடைய தொடர்பும் விட்டுப்போகாது. செலவும் அதிகமாகாது. நம்முடைய பணமும் வேறு யாருக்கும் போய்விடாது. இளவழகன் B. A. தேர்ச்சியுற்றிருக்கிறான்."

"உ...ம்..."

"என்ன தம்பி பதிலே சொல்ல மாட்டேனென்கிறாயே!"

"உம்...ம்..."

அப்போதுதான் சீதை வந்தாள். வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பார்களே அதுபோலப் பதிற்சொன்னாள்; சந்தான முதலியாரின் தமக்கை குணச்செல்விக்கு. "எங்களுடைய மகளை உங்களுக்கு தர முடியாது. அவளை மதுரைச் சங்கரனுக்குத்தான் கொடுக்கப் போகிறோம்." என்றாள் சீதை.

குணச்செல்வி பதிலே சொல்லாமற் சிலைபோல நின்றாள். மீண்டும் தொடர்ந்து "நீங்கள் இப்படி ஏதாவது உளறுவீர்கள் என்றுதான் நானும் அவரும் உங்களுக்குக் கடிதம் போடக்கூடாது என்று கூட தீர்மானம் பண்ணியிருந்தோம். பானு முதலியார் தூண்டிய காரணத்தால் தான் கடிதம் கூடப் போட்டோம்" — என்று சீதை சொன்னாள். இன்னும் என்னவெல்லாமோ பேசிவிட்டுச் சந்தான முதலியாரை "வாருங்கள் போவோம்" என்று சொல்லிவிட்டுச் சென்றாள். தமக்கை இப்படி வருந்துகிறாளே என்று கூட எண்ணாமல் முதலியார் சீதையைப் பின் தொடர்ந்தார். குணச் செல்வி தன் தம்பியின் மாற்றத்தைக் கண்டு மிக மனம் புழுங்கினாள். ஒருவாறு தேற்றிக் கொண்டு, தோழியர் சூழ்ந்திருந்த சிங்காரியிடம், "போய் வருகிறேன்" என்று அழுதுகொண்டே சொல்லி விட்டுச் சென்றுவிட்டாள். சிங்காரி சரியென்று கூடச் சொல்லாமல் தலையை மட்டும் அசைத்தாள். பணத்திமிர் அவளை அப்படியாக்கி யிருந்தது. விதை யொன்று போட சுரை யொன்று முளைக்கும்.

"செல்வம் வந்துற்றகாலைத் தெய்வதுஞ் சிறிது பேணார்
சொல்வன அறிந்து சொல்லார் சுற்றமுந் துணையும் நோக்கார்
வெல்வதே நினைவ தல்லால் வெம்பகை வலிதென் றெண்ணார்
வல்வினை வினைவு மோரார் மண்ணின்மேல் வாழு மாந்தர்"

என்ற வில்லிபுத்தூராழ்வார் பாட்டிற்குச் சிறந்த எடுத்துக் காட்டுச் சந்தான முதலியாரின் குடும்பந்தான்.

குணச் செல்விக்கு மனம் மிக நொந்தது. தன் கணவர்—பெயர் சீதாராமன்—தற்போது படைத் தலைவராக இருந்திருந்தால் சந்தானத்தின் குடும்பம் இப்படி இகழ்ந்திருக்குமோ தன்னை என்று எண்ணினாள். பாழும் விமான விபத்துத்தான் பல ஆண்டுகளுக்கு முன்னமே படைத்தலைவர் சீதாராமனின் வலக் கையைக் கொண்டுபோய்விட்டதே! அதனாற்றானே குணச்செல்வியின் குடும்பம் பணச் செல்வத்தில் குறைவை எய்தியது. கையிழந்த சீதாராமன் கோயிற்பட்டியில் உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுத்துக் கொஞ்சம் சம்பாதித்தார். அவர் படித்தவராதலால் தன் பிள்ளைகளையும் கல்லூரிப் படிப்புக்கு அனுப்பவேண்டுமென்ற எண்ணத்தோடு பழக்க வைத்தார். அதனாலும் குணச் செல்வியின் நகை முதலியன குறைந்தன. நாளடைவில் இல்லாமற் போயிற்று என்று சொல்லும் படியான நிலைமைக்கு வந்தது.

இளவழகன் B. A.,க்குப் பெண் வீட்டார் பலர் வந்தனர். வந்தவர்களிற் பெரும்பாலோர் மிகப் பெரிய பணக்காரர்கள். ஏன் வந்தார்களென்றால் இளவழகன் B. A.; தேர்ச்சியுற்றவன் மட்டுமல்லன். பெயருக்கேற்ப இளமையும் அழகும் உடையவன். யாரிடமும் அன்பாகப் பழகுவான். எதையும் நன்றாக ஆய்ந்து செய்வான். அவன் கல்லூரியில் கல்லூரித் தேர்விலும் சரி, பல்கலைக் கழகத் தேர்விலும் சரி அவன்தான் முதல்வனாக வருவான். கல்லூரியில் அவன் கலந்து கொள்ளாத போட்டிகள் மிகச் சில. அவற்றுள் பரிசு பெறாதன மிகமிகச் சில. சென்னை மாகாணப் பேச்சுப் போட்டியிலும் கட்டுரைப் போட்டியிலும் அவனுக்குத்தான் முதற்பரிசு. இவைகளே அவனிடம் பணக்காரர்களை இழுத்து வந்தன!

ஆனால் யார் வந்தாலும் சரி பணக்காரர் என்றால் குணச் செல்வி ஒரேயடியாக வேண்டாமென்று மறுத்து விடுவாள். அவள் வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சி அவளுக்கு அந்தப் பாடத்தைக் கற்பித்திருந்தது. உடன் பிறந்த பற்றுக்கூட இல்லாமற்போனால் பணத்தால் எந்தப்

பற்றுதான் இல்லாமற்போகாது என்று எண்ணினாள். சீதாராமன் முதலியோருக்கு அவள் மறுப்பு, வியப்பும், புரியாப் புதிருமாக இருந்தது. கடைசியில் இளவழகனுக்கு நடுத்தரக் குடும்பத்து ஒரே பெண்ணான பொற்செல்வி வாழ்க்கைத் துணைவியானாள். குண நலம் அனைத்தும் ஒருங்கே பெற்றவள் ஆதலால் குணச்செல்வி அத் திருமணத்திற்கு ஒருப்பட்டாள்.

சந்தான முதலியார் தன் ஒரே மகளைத் தன் மனைவியின் வற்புறுத்தலின் பேரிலும், எண்ணூறுததாலும், பொருள் அதிகம் பெற்றவன் என்ற எண்ணத்தாலும் மதுரைச் சங்கரனுக்கே மணம் செய்து வைத்தார். மண விழாவின்போதே உடல் நலக் குறைவு பட்டிருந்த சங்கரனின் தந்தை சில நாட்களில் இறந்து போனார். இறந்துபோன பிறகுதான் சங்கரனின் தந்தை எவ்வளவு கடன் பட்டிருந்தார் என்பது தெரியவந்தது. அவர் பேரிற் குற்றமில்லை. ஒரே மகனான சங்கரன் செய்த திருவிளையாடல்கள் தாம் அவரைக் கடன் வாங்கச் செய்தன. பல முறை அவர் கண்டித்தும் சங்கரனின் நிலைமையில் மாறுதலை ஏற்படவில்லை. தன் மகனுக்கு மணம் நடக்க வேண்டுமே என்ற ஒரே கவலையில் அவர் தன் நிலைமையை எவ்வளவோ மறைத்து வைத்துவிட்டார். இறந்துபோன பிறகுதான் செய்தி வெளியாயிற்று. ஆனால் சங்கரனின் நிலைமையில் சற்றேனும் மாறுதல் ஏற்படவில்லை. அவனுக்கு தன் வீடு சத்திரம் என்றும், சிங்காரி அதில் ஒரு வேலைக்காரி என்றும், அவளுடைய நகைகள் வேண்டும்போது பணம் தரும் இடம் என்றும் தோன்றிற்றோ என்னவோ? பிறர் அவனுடைய செய்கையிலிருந்து தெரிந்துகொண்டது அதுதான். "படப்போடு தின்கிற மாடுக்கு, பிடுங்கிப் போட்டால் போதுமா?" என்பார்களே அதுபோல சங்கரனின் செயல்களுக்குச் சிங்காரியின் நகைகள் சிலநாட் செலவுக்கே பயன்பட்டன.

இந்தச் செய்தி எட்டியதும் சந்தான முதலியார் மிக வருந்தினார். பலர் அவரை மதுரை சென்று சங்கரனையும், சிங்காரியையும் அழைத்து வரச்சொல்லவே அதன்படி செய்

தார். சங்கரனுக்குத் திருநெல்வேலியில்நல்ல பாதுகாப்பாக இருந்தார்.

இளவழகனுக்கு திருநெல்வேலியில் ஒரு கல்லூரியில் ஆசிரியர் வேலை இருப்பதாகத் தெரிந்து மனுச் செய்தான். வேலைக்கு ஆணை வந்தது. இளவழகன் கோயிற்பட்டியிலிருந்து திருநெல்வேலிக்கு வந்து ஒப்புக்கொண்டான். நாலைந்து நாட்கள் கழிந்தன. அன்று வெள்ளிக்கிழமையாகையால் கோயிற்பட்டி சென்று, சனியும் ஞாயிறும் தங்கித் தனக்கு வேண்டுவன எடுத்துவர எண்ணினன் ஒரு புதுப் பெட்டி வாங்குவதற்குக் கடைக்குச் சென்றான். அங்கே சந்தான முதலியாரும், சீதையும் பெட்டி வாங்கிக் கொண்டிருந்தார்கள். இளவழகன் சந்தான முதலியாரை அவருடைய திருமணத்தின்போது—அதாவது அவனுக்கு மூன்று நான்கு வயதாக இருக்கும்போது—பார்த்திருந்தான். எனவே அவனுக்கு அவரை யாரென்று தெரியாது. அவருக்கும் அவனைத் தெரியாது. இருவரும் நிறத்தாலும் உருவாலும் ஒன்றுபோல இருந்த பெட்டிகளை வாங்கினார்கள் பெட்டிகள் இரண்டும் ஒரே இடத்திற் செய்யப்பட்டன. ஆதலால் அவை தம்முள் ஒரு தன்மையனவாகக் காணப்பட்டன. முதலியார் பெட்டியை வேலைக்காரனிடம் கொடுத்து வீட்டிற் கொண்டுவைத்து அதன் பின் துணிக் கடைக்கு வரச்சொல்லி விட்டுத் துணைவியோடு துணிக்கடை சென்றார்.

சங்கரன் மாமனும் மாமியும் வீட்டிலில்லாததால் அதுவே தக்க சமயமென்றெண்ணிப் பெட்டியை உடைத்து நோட்டுக் கற்றைகளாக இருந்த பணத்தையெல்லாம் எடுத்துத் தோல்பை யொன்றில் திணித்துக்கொண்டு மாடியை விட்டுக் கீழிறங்கினன். அப்போதுதான் வேலைக்காரன் வீட்டிற்கு வந்து சேர்ந்தான். பெட்டியை வைத்துவிட்டு மீண்டும் சென்றுவிட்டான். சங்கரன் பெட்டியைத்திறந்து அதனுள்ளேயே கிடந்த அதனுடைய சாவியை எடுத்துக் கொண்டு பையை உள்ளே திணித்துவிட்டு, நேராகச்

கள்ளுக்கடைக்குச் சென்று குடித்துவிட்டு கயத்தார் சென்று ஆகாய விமானத்தில் ஏறி எங்காவது சென்று விடலாம் என்ற எண்ணத்தோடு கார் நிற்குமிடம் வந்து சேர்ந்தான். பெட்டி முதலியனவற்றைக் காரின் மேற்புறத்திலேயே போடவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டதால் அரைகுறை மனதோடு சம்மதித்தான் அதே காரில் இளவழகனும் ஏறியிருந்தான். அவன் பெட்டியும் மேலே கிடந்தது. இரவு ஏழரை மணிக்குக் கயத்தாரையடைந்த சங்கரன் கூலியாள் தவறுதலாக இளவழகனின் பெட்டியை எடுத்துக் கொடுக்கவே பெற்றுக்கொண்டான். காரணம் குடி மயக்கம்தான். கார் கோயிற்பட்டிக்கு விரைந்தது. கீழே இறங்கிய சங்கரனின் புலம்பல் திருடச் சென்ற இருவரைப் பெட்டிக்குள் பணம் இருக்கிறது என்று நம்பச் செய்தது. எனவே அவர்களால் அடித்துக்கொல்லப்பட்டான்.

கோயிற்பட்டிக்குக் கார் சென்றதும் இளவழகன் நிற்குமிடத்திற்கு வந்திருந்த தன் தம்பியைப் பெட்டியை எடுத்துக்கொள்ளச் சொல்லிவிட்டு முன்னால் சென்றான். பெட்டி தோற்றத்தால் வேறுபாடில்லாமையால் அவன் ஐயுறவில்லை.

மறுநாட் காலை ஒன்பது மணிக்குப் பெட்டியைத் திறந்தான். வியப்பு அவனை ஆட்கொண்டது. அது நீடிக்கவில்லை, ஏனென்றால் அழுது கொண்டே வந்து நின்ற சந்தான முதலியாரின் வீட்டு வேலைக்காரன், சந்தானத்தின் மருமகன் பணம் முழுவதையும் எடுத்துக்கொண்டு வெளிச் சென்றதால் ஏற்பட்ட பரபரப்பில் மாடியிலிருந்து வேகமாக இறங்கிய முதலியார் படிகளில் உருண்டு சில மணி நேரங்களுள் மாண்டாரென்றும், சீதையும் சிங்காரியும் மிகவும் வருந்துகிறார்கள் என்றும் சொன்னாள், அதோடு சீதை கடந்துபோன நிகழ்ச்சிகளை மறந்து மன்னித்துத் தங்கள் வீட்டிற்கு உடனடியாக வரச் சொன்னாள் என்றும் சொன்னான். குணச் செல்வியின் குடும்பம் விரைந்து திருநெல்வேலி சென்றது. பிறகு அங்கேயே தங்கி இரு குடும்பமும் ஒரே குடும்பமாக வாழ்ந்து வந்தன.

என்னுது வெஃகிய சந்தான முதலியார் பணப்பற்றால் மாண்டாரென்பதும், வேண்டாம் என்று வெறுத்த குணச்

செல்விக்கும் வெற்றி காணக வந்தது என்பதும் இதனைப் போந்த கருத்துக்கள் ஆதலால் இக்கதை “இறலினு மெண்ணது வெஃகின் விறலீனும், வேண்டாமை என்னும் செருக்கு” என்ற குறளுக்கு ஏற்புடைத்தாதல் அறிக.

கன்னித் தமிழ்ச் சங்கம்,

களஞ்சேரி, (தஞ்சை)

★ தமிழகத்திலும், வெளிநாட்டிலும், ‘தமிழ்க் காதல்’ கொண்டுள்ள எழுத்தாளர்களை ‘அஞ்சல்’ வழியாக ஒன்று கூட்டி கதை, கட்டுரை, கவிதைகளை எழுதச் செய்து முத்தமிழ்க் கலைகளை வளர்க்கிறது.

★ தமிழ் இலக்கியத்தின் சிறப்பை, பிறமொழியினரும் உணரும்படி செய்கிறது.

★ நிகழ்காலத் தமிழ் அறிஞர்களையும் வள்ளல் களையும், நினைவு மலர்களினால் கொண்டாடு கிறது.

★ புத்தம் புதிய எழுத்தாளர்களை தமிழுலகிற்கு அறிமுகப்படுத்துகிறது.

★ மாதம் ஒரு வெளியீடு கொண்டுவந்து அங்கத் தினர்களுக்கு இதழ்களை வழங்குகிறது.

(குழுவினராக) ஆண்டு சந்தா ரூ. 3

“கன்னித் தமிழ்”
களஞ்சேரி தஞ்சை

அனுமன் ஆற்றல்

தொ. மு. பா. தொண்டைமான், பி. ஏ.,

உலகம்போற்றும் உயரிய நூலாம் ஸ்ரீராமகாதையில் பாட்டுடைத்தலைவராய் விளங்கும் வீரர் பலருளர். அறத்தின்வழி நின்ற ஆரியர் கோனான இராமனும், "தள்ளரிய பெரு நீதித் தனியாறு புகமண்டும் பள்ள மெனுந்தகையாக" பரதனும் ஆரியர் உலகத்தை அழகு செய்ய, ஆற்றல் சால் அனுமனும், வலியுடைவாலியும், அருந்தவமும் அளவில் ஆற்றலும் பொருந்திய இராவணனும் தமிழக உலகை அழகுசெய்வாராயினர். இவர்களில் இன்று நம் கவனத்தைக் கவர்ந்தவன் அனுமனே. அனுமனையும் அவனது ஆற்றலையும் பிரித்தெண்ணுவது இயலாத காரியம். அனுமனது ஆற்றலைக் கவியரசர் கம்பர் பெருமான் தனது கவியாற்றலால் புனைந்துரைக்கும் இடங்கள் பலவுள. அனுமன் பகையிலங்கையுட் புகுந்து சீதாபிராட்டியைப் பலவிடத்தும் தேடித்திரிந்து இராவணன் துயிலும் மாளிகையுட் புகுந்தான். அயர்ந்து துயில் கொள்ளும் அரக்கர்கோனைக் கண்ணுற்றான். அப்போழ்து அவன் உள்ளத்தில் எழுந்த உணர்ச்சியைக் கம்பர்,

"தோளாற்றல் என்னாகும், மேல் நிற்கும் சொல் என்னாம்
வாளாற்று கண்ணானை வஞ் சித்தான் மணிமுடி யென்
தாளாற்ற லாலடித்துத் தலைபத்தும் தகர்த்து எந்த
ஆளாற்றல் காட்டேனால் அடியேனாய் முடியேனே"

என்று கூறுகின்றார். இவ்விடத்து அனுமனது தோளாற்றல், தாளாற்றல், ஆளாற்றல் எல்லாம், கவியரசர் கவியாற்றலால் மாண்புடையதாயின. தற்காலத்து மனநூல் வல்லார் கூறுவதொப்ப, மனோவலிமையின் பலனாலே ஒருவனது மெய்யாற்றல் விளங்கும் என்ற உண்மையை அனுமனிடத்து நாம் பலகாலும் காண்கிறோம். அனுமன் அரக்கர்கோன்

மனையில் புகுந்து, அங்கு அவனது பட்டப்பெண் மண்டோதரியைக் கண்டு அவள்தான் சீதையோ என ஐயுற்று நிற்கின்றான். அவள் சீதையாயின், அரக்கர்கோன் அரண்மனையில் அந்தப்புரத்தில் அரம்பையாதியர் அடிவருட அமளியில் துயில்வளோ? துயில்வாளாயின் இன்னும் கற்புடை நங்கையாய் இருப்பளோ? என்று எண்ணினான். இவ்வெண்ணம் உளத்தில் எழுமுன்னே,

கற்பு நீங்கிய கனங்குழை இவளெனில், காகுத்தன் புகழொடும்
பொற்பும் யானும், இவ்விலங்கையும், அரக்கரும் பொன்றுதும் இன்று

என்று ஆர்ப்பரித்தான். அனுமனையும் அவனது மெய்யாற்றலையும் அறியாதார், அறியாதார் என்றே கூறவேண்டும். அவன் கருங்கடல் கடந்ததும், ஆடகத்தருவின் சோலை பொடி படுத்து அமரர் காக்கும் கேடரும் ஓமம் வாங்கியதும், அரக்கரில் வலியுடையரான சம்புமாலி, அட்சயகுமாரன் முதலியோர் முடித்தலை துமித்ததும், இலங்கா நகரையே எரியூட்டியதுமே, அவனது மெய்யாற்றலுக்கு அளவிறந்த சான்றுகளன்றோ? இவனது ஆற்றலை இராமாயண பாத்திரங்கள் பலரும் போற்றிப் புகழ்கின்றார்கள். சீதையைக் "கண்டு வருமென்றிருக்கும் காகுத்தன்" ஆனால் கவி குலக்கோன் இவன் சீதையைக் "கொண்டு வருமென்றிருக்கும்" என்று கவி கூறும் தன்மை கம்பருடையதே யாகும். இம்மட்டோ! அசோகவனத்தில் சீதா பிராட்டியை கண்டு "அண்டர் நாயகன் அருட்தூதன்" என்று கூறி அவளது உள்ளத்திற்கு ஆறுதல் அளித்து, பின்னர்தான் தண்கடல் கடந்து வந்ததைச் சொல்லிய காலத்து, சீதை "பாழிநெடுந்தாள் வீர! நின் பெருமைக் கேற்பப் பகை யிலங்கை ஏழு கடற்கு அப்புறத்ததாகாது இருந்தது" அவ்விலங்கைக்கே ஒரு பெரிய இழிவாகும் என்று கூறுவதில், அப்பிராட்டி அனுமனது ஆற்றலை எவ்வாறு உணர்ந்திருக்கின்றார் என்பது தெரியும்.

ஆற்றல் மிகுந்தவன் அனுமன் என்பதே மக்களின் பொதுக்கருத்தாகும். அனுமனது வரம்பில் ஆற்றல், காவிய உலகத்தில் எண்ணற்கும் எழுதற்கும் அரிதாய்த் திகழ்கின்றது, ஆனால் அவன் ஆற்றலை நினைவு கூறுவார்

எல்லாம் அவனது மெய்யாற்றலையே போற்றுவராயினர்; ஆனால் கவியரசர் கம்பர் பெருமான், இத்தகைமையாமல், அவனது சொல்லாற்றலையும், செயலாற்றலையும் பலவிடத்தும் போற்றிப் புகழ்கின்றார், இராமனும், இலக்குமனும் முதன்முதலில் அனுமனைப் பார்த்தபொழுது, இராமன் தன் இளையோனிடத்து,

"இல்லாத உலகத் தெங்கும் இங்கிவ னிசைகள் கூறக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே யென்னுங் காட்சி
சொல்லாலே தோன்றிற் றன்றே, யார்கொல் இச்சொல்லின் செல்வன்
வில்லார்தோள் இளையவீர! விரிஞ்சனோ விடைவில்லானோ"

என்று கேட்கும் வாயிலாகக் கவியரசர், நம் அனுமனுக்கு "சொல்லின் செல்வன்" என்ற திருப்பெயர் சூட்டுகின்றார். அனுமன்றன் சொல்லின் செல்வத்தை யாவரும் அள்ளிப் பருக ஒரு சில சான்றுகள் கூற விரைகின்றேன். அசோக வனத்து தலைவனைப் பிரிந்து நிற்கும் தலைவியாம் சீதை, தன் நாயகனது நலமறிய விரும்பி, அனுமனிடத்து அவன் நலம் என்னே யென வினவுகின்றாள் அதற்கனுமன் அவன் சுகமே உயிருடன் இருக்கின்றான் என்று சொல்லி, அவன் இதுவரை உயிரை விடாதிருப்பதற்குக் காரணமும் சொல்கின்றான். "ஈண்டு நீ யிருந்தாய் ஆண்டு அங்கு எவ்வுயிர் விடும்இராமன்" உயிராகிய சீதை இவ்விடத்திருக்கும்போது, அவ்விடத்து அவன் எந்த உயிரை விட்டிடுவன் என்று கூறுந் திறன் போற்றுதற் குரியதாகும். இதே அனுமன் இராமனை அணுகிச் சீதையின் நிலை உரைக்கும்போது,

கண்ணினும் உளை நீ தையல் கருத்தினும் உளை நீவாயின்
எண்ணினும் உளை நீ கொங்கை இணைக்குவை தள்ளிநெவ்வாது
அண்ணல்வெங் காமன் எய்த அலர் அம்பு துளைத்த ஆருப்
புண்ணினும் உளை நீ நின்னைப் பிரிந்ததை பொருந்திற்குமோ,

என்று கூறுஞ்சொற்களும் அனுமனது சொல்லின் செல்வத்தைப் பெரிதும் விளக்குகின்றதன்றோ? பிரிந்தவரைக்கூட்டி வைக்கும் ஆற்றல் மிகுந்த அனுமன் அவரவர்க்கு ஏற்பப் பேசி, அவர்களது கருத்திற்கியைய சொற்களைக் கூறுவதாய் அமைந்திருக்கும் கம்பர் கவி நலம் நாம் கண்டு மகிழ்வதற் குரியதாகும்.

இன்னும் அனுமன், இந்திரசித்தின் பாசத்தால் கட்டுண்டு, அமரர் தம புகழ் விழுங்கிய அரக்கர்கோன் முன்பு நிறுத்தப்படுகின்றான். அவன் இவனை நோக்கி, "நீ யாவன்" என வினவுகின்றான். இவன் அவனுக்குப் பதிலிறுக்கும் மாற்றமாய் "அல்லியங் கமலமே யனைய செங்கணோர் வில்லி தன் தூதன் யான்" என்று கூறியதோ டமையாது,

> "அன்னவர்க் கடிமைசெய்வேன் நாமமும் அனுமன் என்பேன்
> நன்னுதல் தன்னைத்தேடி நாற்பெருந் திசையும் போந்த
> மன்னரிற் தென்பால்வந்த தானைக்கும் மன்னன் வாலி
> தன்மகன். அவன்றன் தூதன் வந்தனன் தனியேன்"

என்று முடித்தான். இவ்விடத்து அனுமன் "இராவணா! உனது வலி எவ்வளவினது என்பது தெரியும். வாலியென்றொருவன் வானரத் தலைவனாயிருந்தானென்பது உனக்குத் தெரியும். அவனிடத்து, இல்லை, அவன் வாலினிடத்து நீ பட்டபாடு எனக்குத் தெரியும். அந்த வாலியின் மைந்தனும் அங்கதன் தூதுவனாய் நான் போந்தேன்" என்று கூறுகிறான். இராவணன் "வாலிசேய் விடுத்த தூத! வன்திறலாய வாலி வலியன்கொல், அரசின் வாழ்க்கை நன்றுகொல். என்னலோடும் நாயகன் தூதன் நக்கான்". என அனுமனும் உடனே,

> "அஞ்சலை அரக்க! பார்விட் டந்தரம் அடைந்தான் அன்றே
> வெஞ்சின வாலி மீளான், வாலும்போய் விளிந்தது அன்றே."

என்று கூறி மறுபடியும் நகைத்தான். அஞ்சலை அரக்க வெஞ்சின வாலி மீளான். அவன் வாலும் போய் விளிந்தது என்று எள்ளி நகையாடி, அவன் "கிறையடிக் கோலவாலின் நிலைமையை உன்னுந்தோறும், பறையடிக்கின்ற அந்தப் பயத்தை" இராவணனுக்குத் தீர்க்குமாற்றமாய் சொல்லும் சொல்லின் செல்வம் யாவரும் பருக அமைந்த ஒரு பொருளாகும். இஃதன்றி இவன் இலங்கையினின்றும் திரும்பி இராமபிரானை அணுகிச் சீதையைக் கண்டேன் என்று சொல்வதற்குப் பதிலாக,

"விற்பெருந் தடந்தோள் வீர! வீங்குநீர் இலங்கை வெற்பில்
நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டேனல்லேன்
இற்பிறப் பென்பதொன்றும் இரும்பொறை யென்பதொன்றும்
கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக்கண்டேன்"

என்று கூறுகின்றான். தலைவியின் நிலையையும், நிறையையும் அறியாது அலமந்து நிற்கும் ஒரு தலைவனிடம், இவ்விதம், அழகாக தலைவியின் நிலையை தூதுவன் ஒருவன் கூறுவானேயானால் அது எவ்வளவு மாட்சியுடையதாகும். இதுவரை குறிப்பிட்ட ஒன்றிரண்டு பகுதிகளால், அனுமனது சொல்லாற்றல் ஒரு சிறிது விளக்க முறுவதாகும்.

இனியவன் சொல்லாற்றல் மிகுந்தவனாய் மட்டும் அமையாமல் செயலாற்றல் மிகுந்தவனாய் அமைந்து காண்கின்றான். அவன் செய்கின்ற செயல்கள் யாவும் அவன் உள்ளக் குறிப்பைத் தெள்ளிதில் உணர்த்துவதுடன், அவைகளில் ஆழ்ந்த கருத்துக்கள் பொதிந்தவையாயும் அமைந்திருக்கக் காண்கின்றோம். இவ்விடத்துத் தான், கம்பன் கவியாற்றல் அனுமன் செயலாற்றலாய் அமைந்து கிடக்கின்றது. சீதையைத் தேடிச் சென்ற அனுமனும் மற்றைய வானரங்களும் திரும்பிக் கிட்கிந்தையை அடைகின்றன. அத்தோற்றத்தை கண்முன் தெற்றெனக் கண்ட வான்மீகர் அவ் வானரங்களெல்லாம் "கண்டோம் சீதையை, கண்டோம் சீதையை" என்று குதித்தன என்று கூறுகின்றார். ஆனால் வான்மீகியின் கட்புலனுக்கும் செவிப்புலனுக்கும் தெரிந்தவாறு கண்டோம் சீதையை என்று ஒரு வானரமாவது குதித்ததாக இவர் கண்ணுக்குத் தோன்றவில்லை. ஆனால் இவ்விடத்து அனுமனது செயலாற்றலை விளக்க ஒரு சித்திரம் தீட்டுகின்றார். இராம இலக்குவனரும், சுக்ரீவனும் தெற்கு நோக்கி அனுமன் கீழ்ச்சென்ற வானரங்களை எதிர்பார்த்த வண்ணமாய் அமைந்திருக்கின்றனர். அனுமன் தலைமையில் வானரப்படைகள் தெற்கிருந்து வடக்கு நோக்கி வருகின்றன. தலைவனும் அனுமன், இராமனது திருவடியில் வடக்கு நோக்கித் தண்டமிடுவதை விடுத்து, அவனுக்கு நேரே காலை நீட்டிக்கொண்டு, தெற்கு நோக்கி தண்டனிடுகின்றான். யாவரும் வியப்புற்று அனுமன் அடாத செயல்

செய்துவிட்டதாகக் கருதி ஒருவரையொருவர் பார்க்கின்றனர். இராமபிரான் ஒருவனே, அனுமன்றன் கொள்கையைக் குறிப்பினால் உணர்ந்தான். சீதை தெற்கே யிருக்கிறாள். அவள் நல்ல நிலையில் இருக்கிறாள். அவள் நான் வணங்கத்தக்க பெற்றியை உடையவளாய், கற்புடை மங்கையாய் இன்னும் இலங்குகிறாள் என்னும் குறிப்புகளெல்லாம் வெள்ளிடைமலைபோல் விளங்க தன் செயலால் காட்டினான் என்பதை உணர்ந்தான் இராமன். "கண்டேன் சீதையை" என்று மட்டும் அனுமன் கூறியிருப்பானேயானால், அவள் எங்கே இருக்கிறாள்? அவள் சுகமெப்படி? அவளது நிறையின் நிலை என்ன? என்ற கேள்விகள் எழுந்திருக்கும். வெகு நாளாய்த் தலைவியைப் பிரிந்து வருந்தும் ஒரு தலைவனை இத்தனை கேள்விகட்கும் ஆளாக்காது, தனது ஓரே செயலினால் காட்டிய அனுமனது ஆற்றலே ஆற்றல்! அவ்வாறமைத்த கம்பர் கவிப் பெருமையே பெருமை.

"எய்தினன் அனுமனும் எய்தி ஏந்தல்தன்
மொய்கழல் தொழுகிலன், முளரி நீங்கிய
தையலை நோக்கிய தலையன் கையினன்
வையகம் தழீஇ நெடிதிறைஞ்சி வாழ்த்தினன்"

"திண்டிறல் அவன் செயல்தெரிய நோக்கினன்
வண்டுறை லோதியும் வலியள் மற்றிவன்
கண்டது முண்டு அவள் கற்பும் நன்றெனக்
கொண்டனன் குறிப்பினால் உணருங் கொள்கையான்"

என்ற இரண்டு செய்யுட்களில் அமைத்துக் கொடுத்திருக்கின்றார். ஆகவே அனுமனது மெய்யாற்றல், சொல்லாற்றல் செயலாற்றல் எல்லாம் கம்பரது கவியாற்றலால் அழகுறுவதாயின.

சுருங்கச் சொல்லின் "தன்பெருங்குணத்தால் தன்னில் தானலது ஒப்பிலாதான்" என்ற உயரிய கொள்கையே கம்பர் அனுமனைப்பற்றிக் கொண்டிருந்ததாகும். "ஆற்றலும் நிறைவும், கல்வி அமைதியும் அறிவும் என்னும் வேற்றுமை இவனோடில்லை" என்று கவி கூறுந் திறன் அனுமன் தனிப் பெருமையை நன்குவிளக்குவதாகும். அனுமன் ஆற்றல் மிக்கதலைவன் என்பதோடுமட்டும் அமையாது தமிழ் மக்க

வின் நலமெல்லாம் கனிந்துவிளங்கிய ஒருபேருருவம் என்றே கொண்டு கம்பர் கவிகளால் புனைந்துரைக்கின்றார். பண்டைத் தமிழகத்து அரசியல் முறையை ஐம்பெருங்குழுவும், எண்பேராயமும். பாவை தின்ற முப்பாவை மன்றமும் இன்னைய பிறவும் அழகு செய்கின்றன. இவைகளில் அமைச்சர், காலக்கணிதர், சேனாபதியர், தூதுவர், ஒற்றர் என்ற ஐம்பெருங்குழுவினரின் தன்மையெல்லாம், ஒரு பெரிய உருவினனை அனுமனிடத்து விளங்கக்காண்கின்றோம். அனுமன் போர்க்களத்தில் ஒப்பற்ற சேனா வீரனாய் விளங்கியதும். சீதையை தேடிச் சென்று, காலமறிதல், அண்டர் நாயகனுக்குத் தூதுபோய், அரக்கர் நாடி, ஒற்றாடி, தன்னில் மறைந்து கிடந்த தன்மைகளையெல்லாம் விளக்கினான் என்பது எவரும் அறிந்த உண்மை. சோமேசர் முதுமொழி வெண்பாவில், சிவஞான சுவாமிகள் கூறும்.

"கால்சேய் கதிர்சேயைக் காத்து அரசன் நட்புதவித்
தூலமுடி சூட்டுவித்தான் சோமேசா—சாலப்
பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு."

என்ற செய்யுளில் அமைச்சனது இலக்கணத்திற்கு எடுத்துக் காட்டாக அமைந்த இலக்கியம் நம் மனுமனே யாவன். இவ்வளவு ஆற்றல் சால் அனுமன் அடக்கமுடையவனாயும் திகழ்கின்றான். ஆற்றலும் அடக்கமும் உடன் செல்லுவதாயிற்று. இவன் இலங்கைசென்று அவ்விடத்துத் தான் நிகழ்த்திய வீரச்செயல்களையெல்லாம் ஒருவருக்கும் தானே யுரைத்தானில்லை. "சென்றேன் சீதையைக் கண்டேன் மீண்டேன்" என்ற மட்டில் நிறுத்திவிட்டான். ஆனால் கவியரசர் கம்பர் பெருமான்.

"பொருதமை புண்ணே சொல்ல வென்றமை போந்ததன்மை
உரைசெய ஊர்தியிட்டது ஓங்கிரும் புகையே ஓதக்
கருதலர் பெருமைதேவி மீண்டிடாச் செயலே காட்ட
தெளிதா உணர்ந்தேம் பின்னர் என்னினிச் செய்தும் என்றார்"

என்ற செய்யுளில் அனுமனது அடக்கத்தையும், வானரர் அறிவையும் ஒருங்கே அமைத்துக் காட்டுகின்றார்.

ஆகவே, இதுவரை கூறியவற்றால், மெய்யாற்றலும், சொல்லாற்றலும், செயலாற்றலும், அமைச்சனது திறனும் அடக்கமும் மற்றும் ஏனைய பெருமைகளையெல்லாம் தன்னகத்தே கொண்டு தன்னை ஒப்பாரும், மிக்காரும் இல்லை என்று விளங்கிய பெருமகன் அனுமனே யென்றும் அவனும் அவன் வாலும் எவ்விதம் பிரிக்க முடியாததோ அது போல் அவனும், அவனது ஆற்றலும், ஒருவரும் மறக்க முடியாத பெருமை வாய்ந்தது என்றும் அறிந்தோம்.

Review by "My Magazine"

KANNITHAMIZH

The avowed object of this institution is to preserve the chastity of the Tamil language by eliminting from its alphabets the five letters which are pronounced as 'Ja', 'Sha', 'Ssa', 'Ksha', and 'Sree'. The ground for doing so it is stated, is that these letters are not indigenous but borrowed from the languages of the North like Sanskrit and its derivatives Hindi, etc. The article titled "After Tamil of Sangam Age" is an amplification and demonstration of the object already referred to. While it is not for us to go into the merits of the proposals-would like to state that if today English has become the language of the world it is not because the language today has remained what it was in the days of the Druids and early Anglo-Saxons but because it allowed itself to be enriched by borrowing. as they were or in an Anglicised manner, letters and words from various languages like Latin, French, German, Russian etc., That is why it is so flexible, so comprehensive in its coverage. Sheer ideological theories should not blind one to pressing practicalities of the proposition.

இராமாயணமும் சிலப்பதிகாரமும்

A. S. M. ISMATH BATCHA

இராமாயண கதைக்கு எதிர்மறை போல் விளங்குவது சிலப்பதிகாரம். எப்படி என்று கேட்கிறீர்களா ?

இராமாயணம் வடநாட்டிலிருந்து தென்னாட்டிற்கும், இலங்கைத் தீவிற்கும் வாசகர்களை அழைத்துச் சென்றுவிட்டு, திரும்பவும் வடநாட்டிற்கு அழைத்துப் போய் முடிவடைகிறது. சிலப்பதிகாரம் காவிரிப்பூம் பட்டினத்தில் ஆரம்பமாகி, அங்கிருந்து வாசகர்களை மதுரைக்கும், சேர நாட்டிற்கும் அழைத்துப் போனவுடன், நேரே வட திசையில் திருப்பி, கங்கைக்கரைக்கும் அப்பாலுள்ள இமயத்திற்கும் இழுத்துப் போய்விட்டு, திரும்பவும் தமிழ் நாட்டிற்கு அழைத்து வந்து முடிவடைகிறது.

இராமாயணம் வடநாட்டிலிருந்த ஒரு அரசகுமாரனின் வீரத்தையும் உயர்ந்த பண்பாடுகளையும் சொல்கிறபோது, சிலப்பதிகாரம் தென்னாட்டு அரசர்களின் வீரத்தையும், உயர்ந்த பண்பாடுகளையும் சொல்கிறது.

இராமாயண கதை, அயோத்தியில் பிறந்த ஒரு அரசகுமாரன், தனது சொந்த அரசாங்க படை பலமின்றி, தனது சொந்த குடிபடை பலமுமின்றி, தூர தேசத்திலேயே தனக்குத் தேவையான படை பலத்தைத்திரட்டி, வலுமிக்க இலங்கை வேந்தனை முறியடித்துக்கொன்று, தனது ஆணைக்கு அடங்கிய ஒருத்தனுக்கு முடி சூட்டி வைத்துவிட்டு தனது தலைநகருக்குத் திரும்பி முடிசூட்டிக் கொண்டதாக விவரிக்கிறது. சிலப்பதிகாரம், தென்னாட்டிலிருந்த சோழ சேர பாண்டிய மன்னர்கள் மூவருமே வெவ்வேறு சமயங்களில் வடநாட்டை வென்று இமயத்தில் முறையே புலி, வில், மீன் கொடிகளை நாட்டியதாகவும், தமது ஆணைக்கு அடங்கியவர்களையே வடநாட்டு அரியணை

களில் அரசிருக்கச் செய்திருந்ததாகவும், தமது ஆணைக்கு அடங்காமல் தம் பலத்தை எள்ளி நகையாடியவர்களை அடக்கும் பொருட்டு சேரன் செங்குட்டுவன் இறுதியாக ஒரு தட்வை படையுடன் வடநாடு சென்று, கங்கைக் கரையில் ஆரிய மன்னர்கள் பலருடைய கூட்டு சேனைகளை புறியடித்து, வெற்றிப் பெற்றதாகவும், ஏளனச் சிரிப்புச் சிரித்தவர்களின் தலைகளில் கற்களை ஏற்றிச் சுமந்து வரச் செய்ததாகவும், ஆணைக்கு அடங்கியவர்களிடம் கப்பம் வசூலித்து வந்ததாகவும் சொல்கிறது.

இராமாயண கதை, இலங்கை வேந்தன் அதர்மத்தின் வடிவமாக விளங்கினான் என்றும், நல்லவர்கள் எடுத்தியம்பிய நன்னெறிகளைச் செவி மடுக்க மறுத்தான் என்றும், மனம் உணர்ந்து அவன் தீய காரியங்களைச் செய்தான் என்றும் சொல்கிறது. சிலப்பதிகாரக் கதை, தென்னாட்டு சேர சோழ பாண்டிய மன்னர்கள் தர்மத்தின் வடிவமாக விளங்கினார்கள் என்றும், அவர்கள் மனமறிந்து எந்த அநீதியையும் யாருக்கும் இழைக்கவில்லை என்றும், அவர்களையும் மீறி அவர்களுக்கே தெரியாமல் ஏதாவது அநீதி யாருக்காவது இழைக்கப்பட்டுவிட்டால் அதற்காக மனம் வருந்தி உயிரையே விட்டுவிடக்கூடிய உயர்ந்த பண்புடையவர்கள் என்றும் சொல்கிறது.

இராமாயண கதை, அழகிலும் குணத்திலும் கற்பிலும் சிறந்த மண்டோதரியை மனைவியாகப் பெற்றிருந்தபோதிலும், இலங்கை வேந்தன் வேறொருவனுடைய அழகிய மனைவியைக் கவர்ந்துசென்று கெடுக்க முயன்றான் என்றும், அதன் காரணமாகவே அவனுடைய நாட்டின்பேரில் படையெடுத்துச் செல்லவேண்டிய அவசியம் வடநாட்டு இளவரசனுக்கு ஏற்பட்டது என்றும் சொல்கிறது. சிலப்பதிகாரம், தென்னாட்டு மன்னர்கள் குணத்திலும் கற்பிலும் சிறந்த மனைவிகளைப் பெற்றிருந்ததனால், கற்பின் மேன்மையை உணர்ந்திருந்தனர் என்றும், பத்தினிகளுக்கு கோயில்கட்டி சிறப்பிக்க வேண்டுமென்ற காரணமாகவே வடநாடுகளின் பேரில் படையெடுத்துச் செல்லவேண்டிய ஒரு அவசியம்

சேரனுக்கு ஏற்பட்டது என்றும் சொல்கிறது. இதோடு மட்டுமல்லாமல், இலங்கையை ஆண்ட கபவாகு என்ற அரசனும் பத்தினிக்கு கோயில் கட்டி விழா கொண்டாடினன் என்றும், பத்தினியின் முலையிட (நெஞ்சக) எரிச்சலுக்குக் காரணமாக இருந்த பொற்கொல்லர்களை பாண்டியன் பலியிட்டு கொன்றதாகவும் சொல்கிறது.

இராமாயண கதை, அதர்மத்தை அழிப்பதற்காக தெய்வமே இளவரசனாக அவதாரமெடுத்து வந்ததென்றும், அவதாரத்தின் குறிக்கோளுக்கு ஏற்ப அவ்விளவரசன் காட்டுக்கு சென்றதாகவும், இலங்கை வேந்தனை போரில் வென்றதாகவும் விவரிக்கிறது. சிலப்பதிகாரம், அரசியல் பிழைத்தோர்க்கு அவர்களுடைய மனதிலுள்ள அறமே உடனடியாகக் கூற்றாகக் கிளர்ந்தெழுகிறது என்றும், அவர்களை அழிக்க அநீதிக்கு ஆளான பத்தினிகளின் மன எரிச்சலே போதுமென்றும் சொல்கிறது. இராமாயணம், அதர்மத்தை படையுடன் வந்த இளவரசனின் பலமே அழித்த தென்று சொல்கிறபோது, சிலப்பதிகாரம் பத்தினியின் ஆத்மீக சக்தியே அதர்மத்தை அழித்ததென்றுசொல்கிறது.

தற்கால அரசியலில், தென்னாட்டை அடக்கி ஆளவும், உருட்டி மிரட்டவும், கேவலப்படுத்தவும் இராமாயண கதையைச் சில வடநாட்டு அரசியல்வாதிகளுக்கு பயன்படுத்த முடியுமென்றால், வடநாட்டை மிரட்டி ஒடுக்கவும் கேவலப் படுத்தவும் சிலப்பதிகாரத்தை வேறு சில அரசியல்வாதிகளுக்குப் பயன்படுத்த முடியும். ஆகவே, இராமாயணத்திற்கு மாற்றாக ஒரு "ராமாயணத்தை" எழுதவேண்டிய அவசியமே இல்லை. ஆனால் மாற்று ராமாயணத்தைச் சிலர் எழுதி நாடகமாக நடிக்கிறார்கள். ஏன்?

ஏனெனில், சிலப்பதிகாரம் கங்கை கரையில் ஆட்சி புரிந்த மன்னர்களையே ஆரியர்கள் என்கிறது. காவிரிப் பூம்பட்டினத்தில் கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் முடித்துவைத்த "மாமுது பார்ப்பனர்களை"யும், கண்ணகிக்குத் தோழியாக இருந்த தேவந்தி என்ற "பார்ப்

பாத்தி"யையும், மாதவியிடமிருந்து ஓலைப்பெற்றுச் சென்ற கோவலனை மதுரைக்கு வெளிப்புறத்தில் சந்தித்த கௌசிகன் என்ற பார்ப்பனனையும், சோழநாட்டு எல்லையைத் தாண்டுவதற்கு முன் மதுரைக்குப் போக வழியைக் கோவலனுக்கு எடுத்துரைத்த அந்தணரையும், கல் சுமந்துவந்த ஆரிய மன்னர்களை சோழனிடமும் பாண்டியனிடமும் காண்பிப்பதற்காக இழுத்துச் சென்ற மாடலன் என்ற பார்ப்பனனையும், சிலப்பதிகாரம் ஆரியர்கள் என்று சொல்லவில்லை. தென்னாட்டுப் பார்ப்பனர்களையும் வடநாட்டு ஆரியர்களையும் வெவ்வேறானவர்களாக சிலப்பதிகாரம் தெளிவாகச் சித்தரிக்கிறது. இது தலைகீழ் இராமாயணக்காரர்களின் தற்கால அரசியலுக்கு ஏற்றதாக இல்லை. இதனாலேயே பார்ப்பனர்களை வெறுப்பதென்பதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளவர்கள், சிலப்பதிகாரத்தின்பேரில் திருப்திக்கொள்ளாமல், தலைகீழ் இராமாயணமென்று ஒன்றை எழுதிக்கொண்டிருக்கின்றனர். இதற்கு மாறாக, பார்ப்பன வெறுப்பின்றி வடநாட்டு வெறுப்பை மட்டும் தமது அரசியல் குறிக்கோளாகவுடையவர்கள், சிலப்பதிகாரத்தைத் தமது இயக்க ஆதார நூலாகக் கொள்கின்றனர்.

V. K. V. & V. R. ரைஸ் மில்ஸ்,

சிதம்பரம்.

பிரசித்தி பெற்ற சிதம்பரம் பச்சையரிசியும், நயம் புழுங்கலரிசியும் மொத்தமாக விநியோகிக்கிறோம்.

தங்கள் தேவைக்கு எழுதுக:

V. K. V. ரைஸ் மில்ஸ்,

நன்னிலம். (S. INDIA.)

இசை இன்பம்

"அழகனார்"

இசையின்பம் என்னும் இத்தொடர் இசையினது இன்பம் என்றேனும் இசையினால் விளையும் இன்பம் என்றேனும் இரு பொருள் தந்து நிற்கும்.

தமிழானது இயலிசை நாடகமெனும் முப்பிரிவில் நிற்கிறது. அவற்றுள் நடுவில் நின்று இயலையும் நாடகத்தினையும் பிணைத்து நிற்பது இசையாகும். இசையென்பது இயற்கையால் எழுகின்ற ஒலிகளின் இயைபு ஆகும். ஒருவனிடத்துத் தோன்றுகின்ற ஒலியோ அல்லது பலரிடத்தோ அல்லது பலவற்றினிடத்தோ தோன்றுகின்ற ஒலியோ தம்முள் இசைந்து சென்றால் இசையெனப்படும். இதனை இயைப்பு இசையாகும் என்பர். இஃது தொல்காப்பிய சூத்திரங் கொண்டு அறியலாம். இது பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த தமிழர் கண்ட இசையின் நுண்மையும் உண்மையுமாகும். இவ்விசையினை வட நூலார் நாதம் என்பர்.

உலகில் உயிர்கள் தோன்றிய பொழுதே மகிழ்ச்சியிலும், துன்பத்திலும், இயற்கையிலும், செயற்கையிலும் ஒலியை கிளப்பப் பழகி கொண்டன. அந்த ஒலிகள் தனித்தோ சேர்ந்தோ இயைந்து ஒழுங்குறச் செல்லும் போது அந்த இசைப்பினை இசையென்றே அழைத்தனர். அது செவிக்கோர் இன்பம் தந்து நிற்கும். ஆதலால் மக்கள் இசை இன்பம் தரும் இயல்பினை அறிந்திருந்தனர் என உணர்கிறோம்.

இயற்கை ஓசை இசையளவே நிற்கும். இத்தோற்றத்தை அகநானூற்றுப் பாடல் ஒன்றால் உணரலாம்.

"ஆடமைக் குயின்ற வலிர்துளை மருங்கிற்
கோடை யவ்வளி குழலிசை யாகப்
பாடின் னருவி பனிநீ ரின்னிசை
தோடமை முழவின் றுதை குரலாகக்
கணக்கலை யிகுக்குங் கடுங் குரற்றூம் பொடு
மலைப் பூஞ்சாரல் வண்டி யாழாக
வின்பல்லி மிழிசை கேட்டு"

என்ற அடிகளில் மூங்கிலில் அமைந்த துளைவழியாகக்காற்று வீசி குழலிசையாக ஒலித்தது என்பதையும், அருவியின் இன்னிசை குழலொலி போல அமைந்த தென்றும், கலையின் தாழ்ந்த ஒலி தூம்பு போன்றிருந்ததென்றும்; வண்டு யாழ் போல் ஒலித்ததென்றும் இசையின் இயல்பு அறிகிறோம். எனவே எங்கெங்கு ஒலி இயைபு உண்டோ அங்கங்கெல்லாம் இசை உண்டெனும் உண்மை பெறப்படும். இங்ஙனம் இயற்கையால் இசை பரந்திருந்தமையினாலே மக்களது பல நிலைகளிலும் இசை கலந்தோடக் காண்கின்றோம்.

இசையென்பது ஒன்றே இயல் தமிழிலும் இசைத் தமிழிலும், நாடகத் தமிழிலும் கலந்து நின்றமை முன்பு குறித்தோம். இயலும் நாடகமும் இசையால் சிறப்பு எய்து கின்றன. நாடகத்தில் பெரும்பகுதி இசை விரவி வருவதும் இசையில்லாது நாடகம் நடைபெறாமையும் நாடகச் சார்பில் இசைப்பெருமையை சுட்டி நிற்கின்றன.

இயற்றமிழ் என்பது உரையும், பாட்டும். அவைகளும் இசையாகும். மக்கள் செய்கின்ற எல்லா முயற்சிகளிலும் தொழில்களிலும், இன்பங்களிலும் துன்பத்திலும், அவலத்திலும் அறிவழிந்த நிலையிலும் இசைகலந்தே நிற்கின்றது.

ஏற்றமிறைப்பவன் பாட்டுப்பாடுகிறான்; இறந்தார்க்கு இரங்குகின்றவளும் இசைத்தே புலம்புகின்றாள்; அழும் குழந்தைக்கு தாலாட்டும் இசையால் அமைகிறது; அடியுண்ட காலத்தும் இசைத்தே புலம்புகின்றனர். பல்வகை விளையாடல்களிலும் இசை கலந்தோடுவது இயல்பு. பிச்சை

கேட்பவனும் இசைத்தே கேட்கிறான். மக்கள் பேசும் பழ
மொழிகள் எல்லாம் மோனை எதுகைகளோடு இயைந்து
இசைத்து நிற்கின்றன. பல்வகையான தொழில்புரிகின்ற
மக்கள் இசைத்து தம்களைப்புப் போக்குகின்றனர்.

வண்டி ஓட்டுபவன் பாடும் இசை கேட்டன்றோ மாடு
கள் துன்பமின்றி வண்டியை இழுத்துச் செல்லுகின்றன.
பட்ட மரமும் தளிர்க்க கண்ணன் குழலூதினான் என ஆழ்
வார்கள் பாடுகிறார்கள். அகத்தியனார் இசைத்த யாழினொலி
கேட்டு கருங்கல்லும் உருகிற்றாம். அறிவில்லாத குழந்தை
முதல் அறிவுள்ள மக்கள் ஈறாக யாவரும் இசையை நச்சி
இன்பம் துய்த்து நிற்கின்றனர். நச்சுப் பாம்பும் குழல் ஒலி
கேட்டு படம் எடுத்து ஆடவும் ஒடுங்கவும் காண்கின்றோம்.
மதம் பொருந்திய யானைகளும் யாழிசைக்கு மதமொழிந்து
நிற்கின்றன.

தினைப்புனத்தின் கண்ணே தினைக்கதிரை உண்ணும்
நிலையில் நின்ற யானை ஒன்று, அப்புனத்தகத்துக் குறத்தி
யொருத்தி குறிஞ்சிப் பண்ணினை எடுத்துப்பாட, தினையினை
யும் உண்ணாது, நின்ற நிலையினையும் விட்டு, நீங்காது படுத
வில்லாத கண்மூடி அயர்ந்து உறங்கிற்று. என்று அக
நானூற்றில் ஒரு நிகழ்ச்சி காண்கின்றோம். ஆதலால் மக்
களது துன்பம் தணிப்பவும் இன்பம் பெருக்கவும் இசை
ஒரு மருந்தாய் அமைகிறது.

கடவுள் நெறிச் சென்ற அன்பர்களும் தம்மிசைப் பா
டல்களால் உளம் உருகப்பாடி இறைவன் திருவடி எய்தி
இன்புற்றனர். உயர்ந்த கருத்துக்களை எல்லாம் சிறந்த
இசைப்பாடல்களில் வைத்து பாடும்பொழுது கொடுங்குண
முடைய பல மக்களும் திருந்திச் சிறப்படைகின்றனர்.

இங்ஙனம் பலவகையானும் இசை மக்கட்கும் உயிர்கட்
கும் இன்பந்தந்து நின்று சிறக்கின்றது.

இசை சுர அமைப்புகளோடு கூடிய வெற்று ஒலி வடி
வமாகவும், பொருள் பொதிந்த கருத்துக்களை உடைய பாடல்

வடிவமாகவும் இருதிறத்தில் அமைந்துள்ளது. இதனை வடமொழியாளர் சங்கீதம் எனவும் சாகித்யம் எனவும் கூறுவர். இசை கேட்பாருடைய உளத்தினைத் தொடும் இயல்புடையது. பல்வகையான எண்ணங்களால் அலைந்து நிற்கின்ற மனம் இசையால் தொடப்பட அமைந்து மகிழ்கின்றது.

செவியுணர்வு ஒன்றே மனிதன் பெற்ற சிறந்த செல்வம். மக்கள் உளத்தைச் சொல்லும் பொருளும் ஆண்டு வெளி வருகின்றன. சொல் கேட்பாருக்கு சுவையுடையதாக இருக்க வேண்டுமென்றால் அது இசைத்தன்மையுடையதாகவே அமைதல் வேண்டும். மக்கள் உரையாடுகின்ற பொழுது ஒலியே முதலில் சென்று செவியைப் பற்றுகிறது. சொற்சுவைகளே கேட்பாருடைய உள்ளத்தை மகிழ்வித்து நிற்கின்றது. ஆதலின் உள்ளத்திற்கு ஒலி இன்பத்தைப் பயந்து நிற்கின்றது.

மகனொருவன் தனது இயல்பான குரலொலியில் பாடுவானாகில் அது இன்பம் பயக்கும் இசையாகவே அமையும். ஆனால் அதைத்தாள அறுதியோடும் நிறுத்துக் கருவிகளோடும் இசைத்துப் பாடின் கேட்டார் பிணிக்கும் நல்லிசையாக மாறும். கேட்டார் தம் சுவை யுணர்வுக்கு ஏற்ப தாளங்களின் அறுதியும் கருவி இசையும் அமைந்த இன்பம் பயக்கும். கருவிகள் தோற்கருவிகள், துளைக்கருவிகள், நரம்புக் கருவிகள், கஞ்சக்கருவிகள் (மிடற்றுக்கருவிகள்) என வகைபட்டு நிற்கும்.

இவற்றுடன் சேர்ந்து பாடுகின்ற பொழுது இசையொலி தன்னியல்பில் சிறந்து இன்பம் பயக்கும். பொருள் நலம் செறிந்த இனிய பாடல்களே பல்வகையான நெறிகளிலும் அமைந்து இசையொடு சேர்த்துப் பாடுகின்ற பொழுது சிறந்த உலகியல் இன்பங்களை அவ்விசை பெருக்குதலன்றி எல்லையில்லா பேரின்பத்தையும் தரவல்லது.

இதுகாறும் இசையென்பது யாது என்பதும் அதன் சிறப்பும் பெருக்கும் வகையும் இன்பந்தரும் முறையும் கூறப்பட்டன.

போற்றுவாய் போற்றுவாயே!

"ஆரம்"

வீர பாண்டியக் கட்டபொம்மன்:

தூங்கியவுன் துயர்தீர்க்கத் துடித் தெழுந்த
பாங்கான பாண்டியனைப் பதைக்கச் செய்தாய்!
மூண்டெழுந்து நின்றதொரு முடிவீ ரன்றான்
பாண்டியனைத் தூக்கிலிட்டுத் துடிக்கக் கொன்றாய்!

வ. உ. சி.

சுதந்திரமே நமது பிறப் புரிமை என்று
வடநாட்டில் திலகரென்பார் உரக்கச் சொன்னார்
அம்மொழியைச் செம்மொழியாய் அகத்திற் கொண்டு.
வழக்கறிஞன் வ. உ. சி. முழக்கஞ் செய்தான்.
வழக்கறிஞர் தொழிலையவன் ஒழித்து விட்டுச்
சிறைபுகுந்து செக்கிழுத்தான் செத்தான் அந்தோ!

பாரதியார்:

தமிழ்தன்னைப் பாரதிதான் அமிழ்தம் என்றான்
மறுமலர்ச்சிக் கவிஞனவன் உறுதி பூண்டு
மறத்தமிழைப் புவிமீது சிறக்கச் செய்தான்
பாரதியார் பாட்டென்றால் மறந்து கேட்பார்
பாட்டென்றால் காதவழி ஓடு வோரும்!
''பாட்டுக்கு ஒரு புலவன் - பாரதி'' என்றார்.
பட்டினியால் வாட்டமுற வருத்திக் கொன்றாய்!

மறைமலை யடிகள்:

தமிழென்னும் கடல்மூழ்கி அமிழ்தம் உண்டு
கரைகண்டார் மறைமலையார் மறுப்போர் யாவர்?
தமிழ்தன்னை இழித்துரைத்தாற் றருக்கம் பேசி
மலைக்கச்செய் மறைமலையும் மாண்ட தையோ!

திரு. வி. க.

"அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பேன்?" என்று
அறைவோர்க்குச் சாட்டையடி கொடுத்தார் பாரில்
பெண்கள்குலப் பெருமைதனைப் பேசி யன்னார்
பெண்கல்வி வேண்டுமெனப் பெரிதுஞ் சொன்னார்.

தொழிலாளர் துன்பத்தைத் துடைப்பான் வேண்டித்
தோற்றுவித்தார் தொழிற்சங்க மொன்று இங்கே
தீஞ்சுவைகொள் காவியங்கள் பஞ்சம் இன்றித்
தெவிட்டாது தீட்டியவர் கொட்டித் தந்தார்.
தமிழ் முனிவர் தமிழ்நாட்டின் தவத்தின் வந்தோர்
தமிழ்ப்பெரியார் தமிழெமது உயிரே என்பார்
தமிழ்த்தென்றல் திரு. வி. க. தளர்ந்து மாண்டார்

பண்டிதமணி கதிரேசனார்:

இனியசுவை நிறைந்த பல பனுவல் செய்தார்
ஏற்றமுடன் பாடத்தைத் திட்டஞ் செய்தார்
திருவாச கத்தினுரை தெளியச் செய்தார்
அறிஞர்திருப் பேரவையில் அரசன் போன்ற
பண்டிதரும் பொன்றிவிட்டார் பாரில் இன்று!

நிதியமைச்சர் சண்முகனார்:

பொருளறிஞர் எல்லோரும் போற்றும் வண்ணம்
பொருட்டுறையில் புதிர்நீக்கிப் புரியச் சொன்ன
பொருளமைச்சர் கலையன்பர் புதுமை கண்ட
கோவைநகர் சண்முகரும் ஆவி நீத்தார்!

டி. கே. சி.

தனக்குரிய தனிப்பாணி தனிப்பண்ணுங் கொண்டு
மணங்கமழும் தமிழ்க்கவிதை மனமகிழ யீங்கு
குற்றால நாதமுனி கூறுமுறை என்றால்
கற்றோரும் கல்லாரும் களிப்புடனே கேட்பார்!
முத்தொள்ள யிரத்தோடு முத்தமிழில் உள்ள
சத்தான நூல்கள் பல உற்றறிந்து உரைத்தார்
இத்தரையில் (இ) ராமகதை இனிதாகச் சொன்னார்
உத்தமராம் டி. கே. சி. உடல்நலிந்து மாண்டார்!

என்னருமைத் தமிழ்நாடே!

என்னருமைத் தமிழ் நாடே தரணி மீது
ஏறுபோல் வீறுகொண்டு எழுவ தென்னாள்
என்னருமைத் தமிழ் நாடே! என்று பாரில்
எனக்குயிணை இல்லையென எழுந்து நிற்பாய்?
உன்பொருட்டு உயிர்நீத்தும் உடல மீந்தும்
பொன்றாத புகழ்கொண்ட சான்றோர் தம்மைப்
போற்றுவாய் போற்றுநீ போற்று வாயே!

மதிப்புரை

சுடாத நெருப்பு

ஆசிரியர்: ரவி(கு. திரவியம்)

வெளியீட்டகம்:
தமிழ்ப் பொழில்
31, சிம்மக்கல் தெரு. மதுரை.
Rs. 1-4-0

சங்கே முழங்குவாய்!—ஒலி
எங்கும் விளங்கிடக்—கடல்
பொங்கிக் குமுறி வந்து சாடினும்
பைந்தமிழ் வாழுமென்று (சங்கே)

திங்கள் அழியினும்—உருவில்
மங்காத் தமிழேன—உயிர்
தங்கு மிடமெல்லாம் சென்று இந்தத்
தரணிக் கெடுத்தோதிட (சங்கே)

எங்கும் ஒளிதர—வானில்
பொங்கிய ரவிதான்—எங்கள்
சங்கங் கண்ட துங்கத் தமிழேன
சனங்களுக் கறிவித்திட (சங்கே)

எங்கள் உயிரும்—உலகில்
எங்கள் மூச்சும்—என்றும்
தங்கிடும் கன்னியாய்த் தரணியில் வாழும்
தமிழ்தா னெனச் செந்தமிழ்ச் (சங்கே)

பாரதிதாசன் முகவுரை

திருத்திப் படித்துத் திரவியத்தின் நூலின்
கருத்திப் படிஎன்று கண்டால் — பெருத்தமகிழ்
வுற்றிடுவார்; செந்தமிழில் உள்ள சுவையனைத்தும்
பெற்றிடுவார் என்னகுறை பின்பு?

காவியமாம், தென்றல், வான் காலைமுத லாம்காட்சி
ஓவியமாம், இந்தி ஒழிப்பாம். இங் — காவன
சொன்ன திரவியத்தின் சொல்லரிய தாம்தொண்டுக்
கென்னகைம் மாறறிவோம் யாம்?

புரட்சிக்கவிஞர் கொடுத்திருக்கும் முகவுரையைவிடச்
சிறந்ததாக நாங்கள் எப்படி வழங்க முடியும்?

ஆசிரியர்: கன்னித்தமிழ்

கோலோடு நின்றான்!

கி. ஆ. பெ. விசுவநாதம்

"வேலோடு நின்றான் இடுவென்றது போலும்
கோலோடு நின்றான் இரவு."

என்பது திருக்குறளில் ஒரு குறள்.

2. கல்வியைப்பற்றிக் கூறி பின் கல்லாமைப் பற்றியுங் கூறியது போல வள்ளுவர் செங்கோன்மைப் பற்றிக்கூறிப் பின் கொடுங்கோன்மையைப் பற்றியுங் கூறும்பொழுது இக் குறளை இரண்டாவதாகக் கூறியுள்ளார்

3. இதில் கோன்மை என்பது கோலின் தன்மை என்றாகி, அரசனது முறை செய்யுந் தொழிலைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

4. கோடாத கோலை "செங்கோல்" என்றும் கோடுங் கோலைக் "கொடுங்கோல்" என்றும் குறிப்பிட்டு மன்னனது நன்முறையையும் வன்முறையையும் விளக்குவது ஒரு தமிழ் மரபு ஆகும்.

5. மன்னன் கைப்பிடிக்கும் செங்கோலானது வணிகன் கைப்பிடிக்கும் துலாக் கோல்போல ஒரு பக்கமும் சாயாது நடுவு நிலையில் நிற்க வேண்டும் என்பது தமிழர் நெறி.

6. தனக்குச் சேரவேண்டிய வரி அல்லாத பிற பொருள்களை மன்னன் மக்களிடத்தில் விரும்பிப் பெறுவது கொடுங்கோன்மையாகும் என்பது இக்குறளின் பொருள்.

7. மன்னன் மக்களிடத்தில் பிறவழிகளில் கேட்டுப் பெறுகிற பொருள்களை "இரவு" என்று வள்ளுவர் இக் குறளில் குறிப்பிட்டுக் காட்டுவது அரசர்களது நெஞ்சத்தில் அம்பு கொண்டு எய்வதாக இருக்கிறது.

8. மன்னன் மக்களிடம் கொடுங்கோன்மையாற் பெற்ற செல்வம் எவ்வளவு உயர்வாக இருப்பினும் அது இரந்து பெற்ற இழிந்த செல்வமேயாம் என்பது வள்ளுவரது முடிவு.

9. இரந்து பெறுகிற இழிகுணம் படைத்த ஒருவனைக் "கொடுங்கோலன்" எனக்கூறினாலும் அவனை மன்னனாக ஒப்புக்கொண்டதாக ஆகுமாம். ஆகவே அவனைக் கொடுங்கோலன் என்று கூறாமல் வெறுங் கோலன் எனக் கூறியுள்ளதாகத் தெரிகிறது.

10. உறுப்புகள் குறைந்துள்ள குருடும், நொண்டியும் ஊன்று கோல் கொண்டு நின்று புரியும் இரத்தல் தொழிலை வெறுங்கோல் கொண்டு நிற்கும் மன்னன் விரும்பிச் செய்வது வெறுப்பிற்கு உரியது என இக்குறள் கூறாமல் கூறுகிறது.

11. கோலோடு நின்ற மன்னவன் மக்களிடம் பெறும் பொருளை "இரவு" என்று வள்ளுவர் சொல்லாற் குறிப்பிட்டு கருத்தால் அதனைக் "களவு" என்று காட்டுவது கருதி மகிழ வேண்டிய ஒன்று.

12. கோல் கொண்டு நின்ற இத்தகைய மன்னர்களது கொடுஞ் செயலுக்கு, காடுகளில் வேல் கொண்டு நின்று "இடு" என்று கூறி வழிப்பறி செய்யும் கள்வரது கொடுஞ் செயலை இக்குறளில் உவமையாகக் கூறியிருப்பது நம் உள்ளத்தை எல்லாம் சுடுகிறது

13. "வேலொடு நின்றான்" என்ற சொற்களிலிருந்து அன்பு, அறம் முதலிய வேறு எதனொடும் நில்லாமை புலப்படுவது போல "கோலொடு நின்றான்" என்ற சொற்றொடரும் அறிஞர் அமைச்சர், முதலிய வேறு எவரொடு நில்லாமையைப் புலப்படுத்துவது எண்ணி எண்ணி வியக்கக் கூடியதாகும்.

14. கொடாவிடில் துன்புறுத்துவோம் என்பதில் மட்டுமல்ல; கொடுப்பதால் நன்மை எதும் கிடைக்காது என்பதிலும் வேலொடு நின்ற கள்வனும் கோலொடு நின்ற மன்னனும் செயலொடு ஒத்து நிற்பது உய்த்து உணரத்தக்கது.

15. வேலோடு நின்றவன் முன்பும் கோலோடு நின்றவன் முன்பும் செல்வமோடு நிற்பதைக் காட்டிலும் வறுமையோடுநிற்பதுநல்லது என்பது இக்குறளின் திரண்ட கருத்து.

16. வேலொடு நிற்பவன் வாழும் காடும், கோலொடு நிற்பவன் வாழும் நாடும், பொருளொடு நிற்பவன் வாழத் தகுதி யற்றவை என்பது இக்குறளின் முடிவு.

17. வேலொடு நிற்பவன் கொடுமை ஒரு பொழுது மட்டுமே துன்பம் தரும்; கோலொடு நிற்பவன் கொடுமையோ எப்பொழுதும் துன்பம் தரும் ஆதலின் கோலின் கொடுமைக்கு வேலின் வெம்மை ஏற்ற உவமையாக இல்லை என வள்ளுவர் வருந்தியிருப்பதாகத் தெரிகிறது.

18. இந்த உவமை பொருந்தாமையாலும் இதனிலும் சிறந்த உவமை கிடைக்காமையாலுமே வள்ளுவர் "என்றது போலும்"! என ஐயப்பாட்டுடன் கூறியுள்ளார். இன்றேல் அவர் "என்றது போல" எனக்கூறியிருக்க வேண்டும்.

19. உயிர்க்கு உடலாகவும், உடலுக்கு உயிராகவும் புவி மன்னர்களைக் கூறுவது கவிமன்னரது வழக்கு ஆதலின் உடலை வருத்தும் வேலும், உயிரை வருத்தும் கோலும் இக்குறளில் குடிகொண்டிருக்கின்றன போலும்.

20. கோலைப் பிடிக்க வேண்டிய மன்னன் தன் பண்பை அடியோடு இழந்துவிட்டு வேலைப்பிடிக்கின்ற வேடனின் பண்பை பெற்றிருந்தாலும், அவன் மன்னனுமல்ல மனிதனுமல்ல என்பதை இக்குறளால் நன்கு அறியலாம்

21. முறை செய்யும் மன்னவன் கொலை செய்யும் வேடனின் குணத்தைப்பெற்று விடுவானானால், கொடியோரைத் தேடி தண்டித்து நல்லோரைக் காக்கும் நற்றொழிலைச் செய்ய அவன் விரும்பமாட்டான் என்ற கருத்தும் இக்குறளில் மறைந்து காணப்படுகிறது.

22. ஈகைத்தொழிலுக்குரிய மன்னன் இரத்தல் தொழிலில் புகுந்து மக்களிடம் விரும்பிக்கேட்டுப் பெறுகின்ற பொருளே வழிப்பறிக்கொள்ளை என்றாகுமானால் கொடா

விடில் இன்புறுத்துவேன் என அச்சுறுத்திப் பெறும் பொருளை எதனோடு ஒப்பிடுவது? எண்ணிப்பார்க்கத் தூண்டுகிறது இக்குறள்.

23. கோலொடு நிற்கும் அரசர்கள் இன்று இல்லை எனினும் கொடுமையொடு நிற்கும் அமைச்சர்களும் அதிகாரிகளும் இன்று உள்ளனர். அவர்கள் கோலொடும் வேலொடும் கொடுமையொடும் நிற்காமல் குறளொடு நிற்க வேண்டும் என்பது நமது ஆசை.

இவ் ஒரு குறள் இவ்வளவு பொருள்களைத் தருமானால் மற்ற 1329 குறள்களும் என்னென்ன தரும்? என்று எண்ணிப்பாருங்கள், எடுங்கள் குறளை! படியுங்கள் நன்றாக! அவ்வளவோடு நின்று விடாதீர்கள்! செய்கையிலும் செய்து காட்டி சிறப்பெய்தி வாழுங்கள், வாழட்டும் தமிழகம்.

சிதம்பரம் ப்ரொவிஷன் ஸ்டோர்ஸ்,
சிதம்பரம்.

பிரசித்திபெற்ற மளிகை வியாபாரிகள்

★ சிதம்பரம் நடராஜர் கோவில் கும்பாபிஷேகத்திற்கு சரக்குகள் சப்ளை செய்து க்யாதி அடைந்த ஸ்தாபனம்.

★ கும்பாபிஷேகம் முதலிய பெரும் விசேஷங்களுக்கும், அன்றாட வீட்டுத் தேவைக்குமான மளிகை சரக்குகள் விலை மிக நயமாகவும், சுத்தமாகவும் கிடைக்கும்.

கன்னித்தமிழ்

மாத வெளியீடு

விளம்பர விகிதம்

ஒரு முறை பிரசுரம் செய்ய

★

முழுப்பக்கம்	ரூ.	10—0—0
அரைப்பக்கம்		5—0—0
பின் அட்டை முழுப்பக்கம் மூன்று கலர்		25—0—0
உள் அட்டை ஒரு கலர்		15—0—0
உள் அட்டை அரைப்பக்கம்		10—0—0

தொடர்ந்து 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 20% குறைக்கப்படும்.

★

சந்தா விபரம்

ஆண்டு சந்தா	ரூ.	3—0—0
ஆறுமாதத்திற்கு		1—8—0
தனிப்பிரதி		0—4—0

கன்னித்தமிழ்

களஞ்சேரி, (தஞ்சை)

ஸ்தாபிதம்: 1878.

A. நல்லாபிள்ளை ஸ்டுடியோ

இந்தியாவில் 77 வருடங்
களாக தொடர்ந்துநடந்து
வரும் ஒரே ஸ்டுடியோ.

A. Nalla Pillai & Sons,

PHOTO HOUSE. **KUMBAKONAM.**

ஜெய்கோபால் & கம்பெனி

கீழராஜவீதி, தஞ்சாவூர்.

எங்களிடம் எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்களும்
ரைஸ்மில் & மாவு மில் சாமான்களும்
பைப்பு & பைப்பு பிட்டிங்குகளும்
விலை சகாயமாய்க் கிடைக்கும்.

ஓர் முறை விஜயம் செய்யுங்கள்

தலைமை ஆபீஸ்:
199, மவுண்ட் ரோடு,
மதராஸ்.

கிளை ஆபீஸ்:
14, பெரியதெரு,
கும்பகோணம்.

ஸ்தாபிதம்:
1942.

தந்தி:
லலிதாலயா

லலிதா பார்மஸி

ஆயுர்வேத வைத்தியசாலை

சென்னை இந்திய வைத்ய போர்டாரால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம்.

தலைமை ஆபீஸ்:— **14**, காமாக்ஷி ஜோஸியர் தெரு,
கும்பகோணம்.

பார்ச்வவாயு, இளம்பிள்ளைவாதம், சூலட்பிடிப்பு, நீடித்த தலைவலி, மூளைக்கோளாறு, வலிப்பு இவைகளுக்கு பிரசித்திபெற்ற சிகித்ஸைகளான நவரைக்கிழி, பிழிச்சல், தாரை, சிரோவஸ்தி முதலிய அபூர்வ சிகித்ஸைகள் அளிக்கிறோம்.

வியாதியஸ்தர்கள் இவ்விடம் தங்கி இருந்து வைத்தியம் செய்துகொள்ள எல்லாவித வசதிகளுடன் கூடியது.

எல்லாவித ஆயுர்வேத மருந்துகளும் மிகக் குறைந்த விலைக்குத் தருகிறோம்.

மானேஜிங் டாக்டர்,
V. R. லக்ஷ்மிகாந்த சர்மா.

Edited and Published by L. SESHADRI (மறைமலையடிமை) 2/3, Kalancheri (Tanjore) and printed by A. S. M. Ismath Batcha, at his ANDAYAN PRESS, 146, THUKKAMPALAYA STREET, KUMBAKONAM.